# கைத்தடி

மாத இதழ்

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

▪ தடி-2, அடி-2 ▪ மே 2018 ▪ தனிச்சுற்றுக்கு மட்டும் ▪ நன்கொடை ரூ.20



## கைத்தடி விருதுகள் 2018

### கைத்தடி இரண்டாம் ஆண்டு துவக்க விழா மற்றும் மதி பப்ளிகேசன் புத்தக வெளியீட்டு விழா

சிறப்புத் தொகுப்பு





மே-1: உழைப்பாளர்கள் தின வாழ்த்துகள்

10ஆம் ஆண்டில்

# SIVAJI SOFA
# சிவாஜி சோபா



தமிழகத்தில்
அழகிய
மிகச் சிறந்த
சோபா
சிவாஜி சோபா





## சிவாஜி செல்வி திருமண மண்டபம்

திருமணம், வரவேற்பு, காதணி விழா, மஞ்சள் நீராட்டு விழா அனைத்து நிகழ்ச்சிகளுக்கு மிகக் குறைந்த விலையில் வாடகைக்கு கிடைக்கும்.

**சிவாஜி சோபா ஓர்க்ஸ்**

2/276, சிவாஜி செல்வி திருமண மண்டபம் பில்டிங், TNEB துணை மின்நிலையம் எதிரில் திருப்பத்தூர் மெயின் ரோடு,
குப்பூர் அஞ்சல், தருமபுரி-636 704. செல்: 9442209050, E-mail: sivajisofadharmapuri@gmail.com




– தனுவசீ –

## வாசகர் பார்வையில்

இன்றைய சூழ்நிலையில் தவிர்க்க முடியாத ஒரு இதழாக கைத்தடி தன்னுடைய முதலாம் ஆண்டை நிறைவு செய்துள்ளது வாழ்த்துகள், தொடருங்கள்...

**– கவிதா, திருப்பூர்**

பல்சுவை இதழாக வலம்வருவதும், புதிய புதிய கருத்தாளர்களை அறிமுகம் செய்வதும் நேர்காணல் பகுதியில் அரிய பெரும் தகவல்களை தொகுப்பதும் வியப்பின் உச்சம் வாழ்த்துகள்... நன்றி!

**– முருகன், தருமபுரி.**

எச்சில் தொட்டி தொடர் சமூகத்தின் அவலநிலையைக் கிழித்து எறிகிறது அப்படி கருத்தாளரை அறிமுகம் செய்து தொடர்ந்து இடம்பெறச்செய்யும் கைத்தடிக் குழுவிற்கு வாழ்த்துகள்... மகிழ்ச்சி!

**– சுதா, பென்னாகரம்.**

அறிவியல் வளர்ந்த காலத்தில் இளையோர் முதல் முதியோர் வரை இணையத்தில் படிக்கும் போது இதழை அச்சிட்டு அதனை குறைவான விலைக்கு மக்களுக்கு கொடுப்பது சாதாரண காரியம் அல்ல; மிக்க மகிழ்ச்சி. உங்கள் உழைப்பு எங்களை ஊக்கப்படுத்துகிறது, பாராட்டுக்கள்...

**– மாதேஸ், கிருட்டிணகிரி.**

## மதம்

மதம் என்னும் விஷயமும் ஆராயத் தகுந்ததேயாகும். மனித வர்க்கம் விலங்குகளைப் போல் தனித்தனியே காடுகளில் வாசஞ்செய்து வந்த நிலைமை மாறி, குடிசைகட்டிக் கூடிக் குலாவி வாழ ஆரம்பித்தபோதே அவற்றிற்குச் சில கொள்கைகள் தேவையாகி விட்டன. எப்படி எனில், எப்படித் தனியே இருக்கும் மக்கள் ஏதாவது ஒரு பொது நன்மையை உத்தேசித்து, தங்களுக்கென்று ஒரு சங்கத்தை நிறுவினால் உடனே அதற்குக் கொள்கைகள் நிர்ணயிக்கின்ற அவசியம் ஏற்பட்டு விடுகின்றதோ அதே போல், மனிதர்களின் கூட்டு வாழ்க்கைக்குக் கொள்கைகளை நிர்ணயிக்க வேண்டியதாகிவிட்டது. அக்கொள்கைகள் தாம் இப்போது மதம் எனப்படுவதாக இருக்கின்றன.

ஆனால், இக்கொள்கைகள் நிர்ணயம் செய்யப்பட்டது எப்படி? எந்த ஆதாரங்கொண்டு என்று பார்ப்போமானால், அது அந்தக் காலத்திய நிலைமை, சீதோஷ்ண ஸ்திதி, மக்களின் அறிவு நிலை - அதாவது, பாமர மக்களின் அறிவீனம், சிலரின் சூழ்ச்சித் திறம் முதலாகிய நிலையில், அதாவது கால தேச வர்த்தமானத்திற்கு ஏற்பச் செய்யப்பட்டவைகள் என்றே சொல்லவேண்டும். மேலும், ஒரு குறிப்பிட்ட கொள்கை, பிற்கால தேசவர்த்தமானத்திற்கோ, சிலரின் சுயநலத்திற்கோ ஏற்றதாயில்லாவிட்டால் யாராவது அறிஞர் அல்லது தந்திரக்காரர் அதை மாற்ற நினைக்கும்போது, பாமர மக்கள் மூடநம்பிக்கையின் பலனாய்த் தங்கள் பிடிவாதம் காட்டி மாற்றச் சம்மதிக்காத காலத்தில், பிரிந்து போய்க் கொள்கைகள் வகுத்து, அதாவது முன்னையதைத் திருத்தியோ அல்லது சிலவற்றை மாற்றியோ அல்லது சில புதியவைகளைச் சேர்த்தோ செய்ய நேரிடும்போது - அது ஒரு புதிய மதமாக ஏற்பட்டுவிடுகின்றதும் உண்டு. இதனால் பாமர மக்கள், அதாவது குருட்டுப் பிடிவாதமுள்ளவர்கள், 'என் மதம் பெரிது'' 'உன் மதம் சிறிது'' என்கின்ற மதச் சண்டைக்கு ஆளாகிவிடவும் நேரிட்டுவிடுகின்றது.

இன்றையதினம் எந்த மதக்காரனையாவது கண்டு, உன் மதம் என்ன? அதன் தத்துவம் என்ன? - என்றால் சில சடங்குகளையும் குறிகளையும் மாத்திரந்தான் சொல்லுவானே ஒழிய, அதன் உண்மைத் தத்துவம், அதாவது எந்தக் கருத்தைக்கொண்டு ஆதியில் மதத்தை உண்டாக்கினார்களோ அந்தக் கருத்து சற்றும் அறிந்திருக்கமாட்டான். அதோடு, அதற்கு நேர் விரோதமாக அறியாமையும் ஒழுக்க ஈனங்களும் ஏற்பட்டு விட்டன. அன்றியும், சிலர் இவற்றை தங்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளவும் கருவியாய் விட்டது. சிறப்பாக இப்போதைய முக்கிய மதங்கள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் பாமர மக்களை ஏமாற்றிக்கொடுமைப் படுத்திப் பணம் பறித்து, புரோகிதக் கூட்டமும அரசாங்கமும் செல்வந்தனும் பிழைக்க மார்க்கங்களாக இருக்கின்றனவேயன்றி, பொதுவாக மனித வர்க்கத்திற்கு அவற்றால் எவ்விதப் பலனும் இல்லாமற்போய்விட்டது.

**(குடிஅரசு – தலையங்கம் – 11–8–1929: 23–4–1949)**



■ மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு. - *தந்தை பெரியார்*

# கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
**மு.சி.அறிவழகன்**

உதவி ஆசிரியர்:
**கா. தமிழரசன்**

ஆசிரியர் குழு:
**புலவர் நாகை பாலு** த.மு.எ.ச.
**முனைவர் கு. முருகேசன்**
**முனைவர் ச.அருண்பிரகாஷ்**

புகைப்படக் கலைஞர்:
**தனுஷவன், ஜோதி வெங்கடாஜலபதி**

ஓவியர்கள்:
**தனுவசி சி.தர்மராஜ், ஓவியர் சிகரன்,**

மெய்ப்புத் திருத்தம்:
**மே.கா.கிட்டு**

இதழ் வடிவமைப்பு:
**டிசைன்ஷாப்,** 76677 55673

களப்பணிக் குழு:
**அ.செ.செல்வம், சி.வீரவேல், கண்மணி, தே.சுரேஷ், அரவிந்த், கவிதாரமேஷ்.**

சட்ட ஆலோசகர்கள்:
**ஆர்.சையத் அன்வர் பாசா,** வழக்கறிஞர்
**ஜெ. தம்பிபிரபாகரன்,** வழக்கறிஞர்

ஆசிரியர் குழு – அலுவலக முகவரி

கைத்தடி
மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்
**மதி பப்ளிகேசன்**
தருமபுரி – 635 205
அலைபேசி: 73733 33078
மின்னஞ்சல்: kaithadimonthly@gmail.com



பேட்டிகள், சிறப்புக் கட்டுரைகளின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கைத்தடி மாத இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல.


## இந்த இதழில்...


| | |
|---|---|
| கைத்தடி விருதுகள் 2018 | 5 |
| படிக்கும் மாணவர்கள் அரசியலில் ஈடுபடுதல் சரியா? | 10 |
| மன்னித்து விடு செல்லமே... | 12 |
| நியமனங்களும் சமூக நீதியும் | 14 |
| தமிழ்நாடு இந்தியாவின் அண்டை நாடா? | 16 |
| வழக்கறிஞர் அ.அருள்மொழி – நேர்காணல் | 18 |
| மாதவிடாய் கப் – நில், கவனி, செல். | 20 |
| கொலை செய்யுங்கள்...! – கவிதை | 21 |
| பெண் என்றால் மானுடம் | 22 |
| கைத்தடி விருதுகள் 2018 – காட்சிகள் | 23 |
| பேஸ்புக்கா? ஸ்கூல் புக்கா? | 24 |
| தமிழர் விளையாட்டுகள் | 26 |
| எச்சில் தொட்டி | 28 |
| வடலூர் துரை. சந்திரசேகரன் – நேர்காணல் | 30 |
| மந்திரமா? தந்திரமா? | 15 |
| கீரைக்காரி – கவிதை | 33 |
| பள்ளிக்கூடம் – கவிதை | 34 |


| கைத்தடி சந்தா விபரம் | தனி இதழ் ₹ 20 |
|---|---|
| ஓராண்டு சந்தா | ₹ 250 |
| இரண்டு ஆண்டு சந்தா | ₹ 470 |
| நான்கு ஆண்டு சந்தா | ₹ 950 |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 1200 |

A/C NO: 34939017347
IFSC CODE : SBIN0000832
NAME : ARIVAZHAGAN.C
PHONE NO : 7373333078
State Bank of India, Dharmapuri



மு.சி.அறிவழகன்

# கைத்தடி விருதுகள் 2018

## கைத்தடி இரண்டாம் ஆண்டு துவக்க விழா மற்றும் மதி பப்ளிகேசன் புத்தக வெளியீட்டு விழா

ஏப்ரல் 01 காலை 10.00 மணிக்கு சென்னை மைலாப்பூரில் உள்ள கவிக்கோ மன்றத்தில் எஸ்.எஸ்.என். பொறியியல் கல்லூரி மாணவர்களின் வரவேற்போடு துவங்கியது...

நிகழ்ச்சி தொடக்கத்தில் வீ.கயல்விழி அவர்கள் கடவுள் மறுப்பு கூற இனிதே துவங்கியது விழா. முனைவர் கு.முருகேசன் அவர்கள் கைத்தடி களப்பணிக் குழு சார்பில் வரவேற்புரை ஆற்றினார். அதன் தொடர்ச்சியாக இரண்டாம் ஆண்டின் முதல் இதழை (கைத்தடி) சாகித்திய விருது பெற்ற எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்கள் வெளியிட மும்பையில் இருந்து வருகை தந்து இருந்த வெண்புறா செல்வக்குமார் பெற்றுக்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக மதி பப்ளிகேசன் வெளியீடான ‘புத்தகம் 01 கவிஞர்கள் 50’ நூலினை வழக்குரைஞர் அ.அருள்மொழி அவர்கள் வெளியிட பெங்களூரில் இருந்து வருகை தந்து இருந்த கலை உட் வொர்க்ஸ் நிறுவனர் இரா.ராசா அவர்கள் பெற்றுக்கொண்டார். அதன் தொடர்ச்சியாக புத்தகத்தில் பங்குபெற்று கவிதைகளை வடித்து இருந்த கவிஞர்கள் பெற்றுக்கொண்டனர்.

கைத்தடி இரண்டாம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகள் அறிவிக்கப்பட்டு இருந்தது. கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற நியூஜெர்சி ம.வீ.கனிமொழி, திருப்பத்தூர் ம.கவிதா ஆகியோருக்கு வழக்குரைஞர் அ.அருள்மொழி அவர்கள் பரிசுகளை வழங்கினார். கவிதைப் போட்டியில் வெற்றிபெற்ற ஈரோடு அசோக் பிரபு, சென்னை முகமது அலி ஆகியோருக்கு எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

தொடர்ச்சியாக வாசகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த கைத்தடி விருதுகள் நிகழ்ச்சி துவங்கியது...

### ‘துணிச்சல் விருது’

முதல் காணொளித் திரையில் திரையிடப்பட்டது... லாவண்யா அவர்கள் மேடையில் அமர்ந்து இருக்க, கீழே உள்ள வரிகள் காணொளியாகத் திரையிடப்பட்டது.

“லாவண்யா - விஜயாவாடாவை பூர்விகமாகக் கொண்ட இவர் ஹைதராபாத்தில் பிறந்தவர், தன்னுடைய கல்லூரி படிப்பை லண்டனில் முடித்து சென்னையில் உள்ளார் தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிந்து வருபவர், சில நாட்களுக்கு முன்பு கொள்ளை கும்பலால் தாக்கப்பட்டவர், அந்தச் சம்பவத்தின் போது லாவண்யா அவர்கள் எப்படி துணிச்சலோடு திறம்பட செயல்பட்டார் என்பதற்கே இந்த விருது வழங்கப்படுகிறது, கொள்ளையர்கள் இவரை ஆயுதங்களை கொண்டு தாக்க முற்பட்ட போது அதனை தடுக்க முயன்றுள்ளார். அந்த கும்பல் தொடர்ந்து இரும்பு கம்பி கொண்டு தாக்கி புதருக்குள் தூக்கி எறிந்திருக்கிறார்கள். அவர்கள் அத்தனை முறை தாக்கிய போதும் அவரிடம் இருந்த துணிச்சல் அவரை திறம்பட செயல்பட வைத்திருக்கிறது. நாம் எழுந்தால் மீண்டும் தாக்குவார்கள் என்பதனை உணர்ந்த லாவண்யா தரையோடு தரையாக நகர்ந்து சாலையை அடைந்து இருக்கிறார். அங்கு மனிதநேயம் மிக்க காவலர்களால்



லாவண்யா - விஜயாவாடா (வலது ஓரம் நிற்பவர்)



▪ மே 1 (1912) – டெல்லி, இந்தியாவின் தலைநகர் ஆனது.

காப்பாற்றப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று துணிவோடு அவர்களை அடையாளம் காட்டி தண்டனை வாங்கிக் கொடுத்துள்ளார் லாவண்யா. அவரின் துணிச்சலை போற்றும் விதமாக அவருக்கு 'துணிச்சல் விருது' வழங்கப்படுகிறது." என்று காணொளி முடிந்தது அதன் தொடர்ச்சியாக சிறப்பு அழைப்பாளர் அ.அருள்மொழி அவர்கள் இரா ராசா, தமிழரசன் முன்னிலையில் விருதை வழங்கினார். விருதைப் பெற்றுக்கொண்ட லாவண்யா ஏற்புரைக் கூறி விருதைப் பெற்றுக்கொண்டார்.

## 'ஊடகத்தின் நீதிக்குரல் விருது'

இரண்டாவது காணொளி திரையில் திரையிடப்பட்டது... ஜீவசகாப்தன் அவர்கள் மேடையில் அமர்ந்து இருக்க, கீழே உள்ள வரிகள் காணொளியாகத் திரையிடப்பட்டது.

ஜீவசகாப்தன் மதுரையில் பிறந்து நுண்ணுயிரியல் பாடத்தில் முதுகலை அறிவியல் பட்டம்பெற்றவர், சமுதாயத்தின் மனச்சாட்சியாக தொண்டாற்றுவதும் காலத்தைப் பதிவு செய்வதும் தன்னுடைய இலக்காகக் கொண்டு செயல்பட்டு வருபவர், அதன் வெளிப்பாடாக தொடர்ந்து செய்தி ஊடகங்களிலும் அச்சு ஊடகங்களிலும்



ஜீவசகாப்தன்

பணியாற்றி வருபவர், குறிப்பாக புதிய பார்வை, பல்சுவை காவியம், கீற்று (இணைய தளம்), பத்திரிகை.காம் (இணைய தளம்) போன்ற இதழ்களில் தொடர்ச்சியாக கட்டுரைகள் மூலம் நிகழ்வுகளை பதிவு செய்து வருபவர், சத்யம் தொலைக்காட்சியில் செய்தியாளராக 1 ஆண்டு பணியாற்றிய இவர் சன்செய்திகளில் செய்தியாளர் அனுபவம் பரந்து பட்டு விரிவான தளத்தில் வளர்த்துக்கொண்டவர், அதன் தொடர்ச்சியாக ஜிடிவி சிறப்பு செய்தியாளராக ஊடகப் பயணத்தின் அடுத்த கட்டத்தை துவங்கியவர், தருமபுரி சம்பவம், திரையரங்குகளுக்கும் ரசிகர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு, மது நுகர்வு சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம், மீனவர் பிரச்சனை, விசுவரூபம் திரைப்பட பிரச்சனை என பல்வேறு விவகாரங்களை அரை மணிநேர ஆவணப்படமாக இயக்கியவர், இமயம் தொலைக்காட்சியில் விவாத நிகழ்ச்சிகளையும், நேர்காணல் நிகழ்ச்சிகளையும் பாராட்டி மரியாதை செய்யும் விதமாக, 2015ஆம் ஆண்டின் டாப் 100 மனிதர்கள் பட்டியலில் இவரைத் தேர்ந்தெடுத்து, ஆனந்த விகடன் பத்திரிகை கௌரவம் செய்தது குறிப்பிடத்தக்கது. நியூஸ் 18 தொலைக்காட்சியில் காலை 7 மணிக்கு தினசரிகளை ஆழமாகத் திறனாய்வு செய்யும் முதல் பார்வை. இரவு நேரத்தில் காலத்தின் குரல் விவாத நிகழ்ச்சி. அரசியல் ஆளுமைகளை நேர்காணல் செய்யும் வெல்லும் சொல் என முக்கிய அரசியல் திருப்பங்களில் நேரலை. கருணாநிதி, காமராசர், பெரியார், மதிமுக, ஆர்.எஸ்.எஸ் வரலாறு, இடஒதுக்கீட்டின் வரலாறு, திராவிட நாடு தொடரும் தர்க்கம், சிலைகள் சர்ச்சை வரலாறு, நடிகர்களின் அரசியல் என பல்வேறு தலைப்புகளில் 20 நிமிட ஆவணப்படங்களையும் எழுதி இயக்கிய ஜீவசகாப்தன் அவர்களுக்கு 'ஊடகத்தின் நீதிக்குரல் விருது' வழங்கப்படுகிறது." என்று காணொளி முடிந்தது. அதன் தொடர்ச்சியாக சிறப்பு அழைப்பாளர் பிரபஞ்சன் அவர்கள் சி.ராமசாமி, பிரகாசம் முன்னிலையில் விருதை வழங்கினார். விருதைப் பெற்றுக்கொண்ட ஜீவாசகாப்தன் அவர்கள் ஏற்புரைக் கூறி விருதைப் பெற்றுக்கொண்டார்.

## 'சமூகப் போராளி விருது'

மூன்றாவது காணொளி திரையில் திரையிடப்பட்டது... குடந்தை தமிழினி அவர்கள் மேடையில் அமர்ந்து இருக்க, கீழே உள்ள வரிகள் காணொளியாகத் திரையிடப்பட்டது.

குடந்தை. தமிழினிஅடிப்படையில் ஆசிரியர். பல வருடங்கள் பள்ளி, கல்லூரிகளில் ஆசிரியர் மற்றும் முதல்வராகப் பணியாற்றியவர். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார் இவர்களைப் பின்பற்றி சமூகப் பணியாற்றும் எழுச்சித்தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களின் தலைமையேற்று பல்வேறு பொறுப்புகளில் இருந்து எந்த எதிர்பார்ப்புமின்றி சேவை, பணியாற்றி வருபவர்... குறிப்பாகப் பெண்களை பகுத்தறிவு உள்ளவர்களாக, சுயமரியாதை உள்ளவர்களாக மாற்றுவதில் தந்தை பெரியாரின் கருத்துக்களை குறிப்பாக 'பெண் ஏன் அடிமையானாள்?' புத்தகத்தின் வாயிலாகப் பரப்பி வருபவர். பல சுயமரியாதைத் திருமணங்களைத் தலைமையேற்று நடத்தியுள்ளேன்... இளைஞர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் வழிகாட்டல்கள் செய்து வருகிறார்.



குடந்தை. தமிழினி

இளைஞர்களையும் இளம்பெண்களையும் சமூக நீதியை நிலைநாட்டும் போராட்டக்களத்தில் புரட்சிகரமாகப் போராட உற்சாகப்படுத்துவதுடன் பயிற்சி வகுப்புகளும் நடத்தி வருபவர்... அவரின் சமூகப் பணியை போற்றும் வகையில் அவர்க்கு 'சமூகப்போராளி விருது' வழங்கப்படுகிறது." என்று காணொளி முடிந்தது.

அதன் தொடர்ச்சியாகச் சிறப்பு அழைப்பாளர் அ.அருள்மொழி அவர்கள் தம்பிதுரை செங்கை சுந்தரம் முன்னிலையில் விருதை வழங்கினார். விருதைப் பெற்றுக்கொண்ட தமிழினி அவர்கள் ஏற்புரைக் கூறி விருதைப் பெற்றுக்கொண்டார்.

## 'மக்கள் மொழிக் கவிஞர் விருது'

நான்காவது காணொளித் திரையில் திரையிடப்பட்டது... குடந்தை. தமிழினி அவர்கள் மேடையில் அமர்ந்து இருக்க, கீழே உள்ள வரிகள் காணொளியாகத் திரையிடப்பட்டது.

பாடலாசிரியர் விவேகா, திருவண்ணாமலை மாவட்டத்தில் பிறந்து அதே மாவட்டத்தில் பள்ளி கல்லூரிப் படிப்பை முடித்து, சென்னையில் பத்திரிக்கையாளராக தன் வாழ்க்கைப் பயணத்தைத் துவங்கியவர். தமிழகத்தின் முன்னணித் திரைக் கவிஞர்களுள் ஒருவர் விவேகா. கவிஞர், பாடலாசிரியர், பேச்சாளர், எழுத்தாளர் என்று இன்றும் சுறுசுறுப்பாக இயங்கும் இளைஞர். 'நீ வருவாய் என' என்ற படத்தில் 'பூங்குயில் பாட்டு பிடிச்சிருக்கா' என்ற பாடலின் மூலம் தமிழ்த் திரையுலகப் பாடலாசிரியராக அறிமுகமானார். 'பூங்குயில் பாட்டு புடிச்சிருக்கா' 'மின்சாரம் என்மீது பாய்கிறதே' போன்ற இரண்டாயிரம் பாடலுக்கு மேல் எழுதி இருக்கிறார், சமீபத்தில் கருத்தவன் எல்லாம் களிஜா என்ற பாடலை எழுதினார். இந்தப் பாடல் சமூகப் புரட்சிப் பாடலாக கருதப்பட்டது. அந்தப் பாடலுக்காக 'மக்கள் மொழிக் கவிஞர் விருது' வழங்கப்படுகிறது." என்று காணொளி முடிந்தது. அதன் தொடர்ச்சியாக சிறப்பு அழைப்பாளர் பிரபஞ்சன் அவர்கள் தமிழேந்திவீரவேல் முன்னிலையில் விருதை வழங்கினார். விருதைப் பெற்றுக்கொண்ட கவிஞர் விவேகா அவர்கள் ஏற்புரை கூறி விருதைப் பெற்றுக்கொண்டார்.


பாடலாசிரியர் விவேகா

## 'தன்னம்பிக்கையாளர் விருது'

ஐந்தாவது காணொளித் திரையில் திரையிடப்பட்டது... கௌசல்யா சங்கர் அவர்கள் மேடையில் அமர்ந்து இருக்க, கீழே உள்ள வரிகள் காணொளியாகத் திரையிடப்பட்டது.

கௌசல்யா சங்கர் சமூகத்தால் பாதிக்கப்பட்டு சமுகத்தை மாற்ற துடிக்கும் இளம் பெண். திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையை அடுத்த குமரலிங்கம் கிராமத்தைச் சார்ந்த சங்கர் திண்டுக்கல் மாவட்டம் பழனியைச் சார்ந்த கௌசல்யாவை 2015ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் நாள் திருமணம் செய்தார், இந்த நிலையில் 2016 மார்ச் மாதம் 13ஆம் நாள் உடுமலைப்பேட்டை பேருந்துநிலையம் அருகில் கௌசல்யா குடும்பத்தினர் கூலிப்படையை வைத்து இருவரையும் வெட்டிச் சாய்த்தனர். இதில் சங்கர் சம்பவ இடத்தில் உயிர் இழந்தார், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட கௌசல்யா உடல் நலத்தோடும், தன்னம்பிக்கையோடும் தேறினார், தன்னை எந்தச் சாதி இழிவாகக் கருதியதோ அதற்கு எதிராகத் தொடர்ந்து போராடி வருபவர், ஆணவக்கொலைகளுக்கு தனிச் சட்டம் வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதனை உலகிற்கு உரக்கச் சொன்ன பெண். குற்றவாளிகள் தன்னுடைய பெற்றோராக இருந்தாலும் அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும். என்ற உறுதியோடு செயல்பட்டு வருபவர்.


கௌசல்யா சங்கர்

பெரியார், அம்பேத்கார் புத்தகங்களை வாசித்து அதனை தன் வாழ்வியல் நெறியாகக் கொண்டு செயல்படுவதோடு புதிய இளைஞர்களுக்கு பறை பயிற்சி, சிலம்பம் பயிற்சி போன்றவைகளைக் கொடுப்பதோடு மட்டும்மல்லாமல் 'சங்கர் சமூக நீதி அறக்கட்டளை'யைத் துவங்கிச் சேவை செய்துவருபவர் ஒவ்வொரு விசைக்கும் அதற்குச் சமமான எதிர் விசை உண்டு என்பதை இளம் வயதில் இந்த சமூகத்துக்கு செயலால் செய்துகாட்டியப் புரட்சிப் பெண் கௌசல்யா அவரின் தன்னம்பிக்கையைப் போற்றும் வகையில் 'தன்னம்பிக்கையாளர்' விருது வழங்கப்படுகிறது." என்று காணொளி முடிந்தது. அதன் தொடர்ச்சியாகச் சிறப்பு அழைப்பாளர் அ.அருள்மொழி அவர்கள் செல்வி செல்வம் முன்னிலையில் விருதை வழங்கினார். விருதைப் பெற்றுக்கொண்ட கௌசல்யா அவர்கள் ஏற்புரைக் கூறி விருதைப் பெற்றுக்கொண்டார்.

## 'வளரும் பெரியாரியல் பேச்சாளர் விருது'

ஆறாவது காணொளித் திரையில் திரையிடப்பட்டது. மணியம்மை அவர்கள் மேடையில் அமர்ந்து இருக்க, கீழே உள்ள வரிகள் காணொளியாகத் திரையிடப்பட்டது.

பா.மணியம்மை சென்னையிலேயே பிறந்து சென்னையிலையே வளர்ந்து, சாதிய கொடுமைகளை நேரடியாக அறிந்துகொள்ளாத பெண், தந்தை பெரியாரை படிக்கத் தொடங்கியதில் இருந்து சாதிய ஆதிக்கத்தையும் பெண்ணடிமைத்தனத்தையும் ஒழிக்க வேண்டுமென்று

தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். மாணவப் பருவத்தில் இருந்தே திராவிட இயக்க உணர்வு கொண்டவர். தந்தை பெரியார் சொன்னதை தன் வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டவர். "மனிதன் தானாகப் பிறக்கவில்லை தனக்காக மட்டுமே வாழாமல் தொண்டு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் தந்தை பெரியாரால் உருவாக்கப்பட்ட திராவிடர் கழகத்தில் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் தலைமையில் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டு இருப்பவர். தந்தை பெரியார் காண விரும்பிய சமத்துவச் சமுதாயத்தை நோக்கிப் பயணம் செய்பவர். அண்ணல் அம்பேத்கர், பச்சைத் தமிழர் காமராசர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் மீது பற்றுக் கொண்டவர், தொடர்ந்து திராவிட


பா.மணியம்மை சார்பாக குயில்மொழி விருதை பெற்றுக் கொண்டார்கள்.

இயக்க மேடைகளில் தன்னுடைய பேச்சு கலையால் பகுத்தறிவுக் கருத்துக்களை விதைத்து வருபவர்... அவர்களுக்கு 'வளரும் பெரியாரியல் பேச்சாளர் விருது' வழங்கப்படுகிறது." என்று காணொளி முடிந்தது. அதன் தொடர்ச்சியாகச் சிறப்பு அழைப்பாளர் பிரபஞ்சன் அவர்கள் டி.எஸ்.எஸ்.மணி, வனவேந்தன் முன்னிலையில் விருதை வழங்கினார். விருதைப் பெற்றுக்கொண்ட மணியம்மை அவர்கள் ஏற்புரைக் கூறி விருதைப் பெற்றுக்கொண்டார்.

இதன் தொடர்ச்சியாகக் கைத்தடி களப்பணி குழுவினருக்கும் எழுத்தாளர்களுக்கும் சிறப்பு விருந்தினர்கள் பயனாடை அணிவித்து வாழ்த்துகளைப் பகிர்ந்தனர்... இந்த நிகழ்ச்சியில்.

## களப்பணியாளர்கள்

பார்த்திபன் ப, கா.தமிழரசன், புலவர் நாகை பாலு, அ.செ.செல்வம், சி,வீரவேல், கண்மணி, தே.சுரேஷ், அரவிந்த், கவிதாரமேஷ், எஸ்.ஜெர்லின் பிரீமா, ஆர்.சையத் அன்வர் பாசா, ஜெ.தம்பிபிரபாகரன், தனுவசி தர்மராஜ், ஓவியர் சிகரன், தனுஷவன், ஜோதி வெங்கடாசலபதி, மே.கா.கிட்டு, சண்முக ராமநாதன், செந்தில்குமார்,

## எழுத்தாளர்கள்

நா. காமராசன், மு.சி.அறிவழகன், பார்த்திபன் ப, கா.தமிழரசன், சிவா சடையன், கு. முருகேசன், பழனி மதிவதனி, உஷாதீபன், தெ.ரங்கராசன் (எ) திராவிட ராசன், நெல்லை சுப்பையா, டி எஸ் எஸ் மணி, நாகை பாலு, பழ.வெங்கடாசலம், மருத்துவர் யாழினி, ஷாலின், எம் நியான சேகர், பூ கொ சரவணன், அ.தீ.ரமேஷ் கார்த்திக், எஸ்.ஜெர்லின் பிரீமா, மழவை சு.பெ.தமிழமுதன்,


சென்னை முகமது அலி - கவிதை 'கொலை செய்யுங்கள்'


நியூஜெர்சி ம.வீ.கனிமொழி சார்பாக வீரமர்தினி விருதைப் பெற்றுக் கொண்டார்கள். - படிக்கும் மாணவர்கள் அரசியலில் ஈடுபடுதல் சரியா...?


ஈரோடு அசோக் பிரபு - கவிதை - 'கீரைக்காரி'


திருப்பத்தூர் ம.கவிதா சார்பாக செல்வி பெற்றுக் கொண்டார்கள் - திராவிடத்தால் வாழ்ந்தோமா...? வீழ்ந்தோமா...?



எழுத்தாளர் பிரபஞ்சன் வழக்குரைஞர் அ. அருள்மொழி இதழாசிரியர் மு.சி.அறிவழகன்

முரளிகிருஷ்ணன் சின்னதுரை, கா.ந.கல்யாணசுந்தரம், பா.கார்த்திகேயன், வழக்குரைஞர் கிருபா முனுசாமி, ராஜபார்த்திபன் இரவிச்சந்திரன், வழக்குரைஞர் கனிமொழி, கோவை சுபா, மா.கோ. முத்து, உ. திலகவதி, தேன்மொழி, வி.சி.வில்வம், உடுமலை வடிவேல், ச.அஜிதன் சந்திரஜோதி, கல்பாக்கம் சீனு, அகில், காமராஜ், செ.ஜனனி, பு.வேதவள்ளி, கௌசல்யா சங்கர், புதுவை மு.ந. நடராசன், கோபால கிருஷ்ணன், இரா.அன்பரசன், சுசிலா, க.அருள்மொழி,

## கல்லூரித் தோழர்கள்

தனுஷவன், திருச்சி சந்தியா, பா. மணியம்மை, கரிஸ்மா, ஓவியா, மகாலட்சுமி, பிரியதர்சினி, நிவேதா பிரியா, பிரகாஷ், கிரிராஜ், வித்தியாசாகர், ஜோதிவேங்கடாசலபதி, ஜெரோம் சகரியா, அஜித், சாம், கார்த்திக், லோகேஷ், ஆகியோருக்குச் சிறப்பு செய்யப்பட்டது.

இதன் பிறகு இரா சின்னசாமி அவர்கள் எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்களுக்குப் பயனாடை அணிவித்து சிறப்புரை ஆற்ற அழைத்தார் அழைப்பை ஏற்றுக்கொண்ட பிரபஞ்சன் அவர்கள், "40 ஆண்டுகளாக இதழ் ஆரம்பிக்க வேண்டும் என்று கருதி வருகிறேன். இன்னும் நடந்த பாடு இல்லை இனியும் நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை" என்று கூறியதோடு மட்டும் இல்லாமல் "கைத்தடி எனக்கு இரண்டு பக்கம் கொடுத்தால் தொடர்ந்து எழுதுவதாக ஒப்புதல் கொடுத்தார், இவ்வளவு தரமான இதழ் தொடர்ந்து வெளிவர வேண்டும்" என்று வாழ்த்துகளைக் கூறி அமர்ந்தார்.

தொடர்ந்து வழக்குரைஞர் அ. அருள்மொழி அவர்களுக்கு சி.முனியம்மாள் அவர்கள் பயனாடை அணிவித்து வரவேற்றார். அதன் பின் எழுத்தாளர்கள் இதழை வாழ்த்தியதோடு மட்டுமல்லாமல் இன்னும் கடந்து செல்ல வேண்டிய தூரத்தைப் பற்றிய விரிவான முன்னெடுப்பை முன்வைத்து சிறப்புரையாற்றினார். அத்தோடு இதழின் சிறப்புகளை எடுத்துரைத்ததோடு இதழுக்காக உழைத்தவர்களையும், இதழின் தரத்தையும் முன்வைத்து உரையாற்றினார், தொடர்ந்து பகுத்தறிவுக் கருத்துகள் மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கப்பட வேண்டும் அதனை இளைஞர்கள் கையில் எடுத்து இருப்பது மகிழ்ச்சியாக உள்ளது என்று பதிவு செய்து உரையாற்றி அமர்ந்தார்.

இறுதியாக இதழாசிரியர் மு.சி.அறிவழகன் அவர்கள் ஏற்புரையாற்றினார். அவர் பேசுகையில், உங்களுக்கு இப்போது நன்றி சொல்லி உங்களை கடந்து போக விரும்பவில்லை வணக்கம் சொல்லி உங்களோடு தொடர்ந்து பயணிக்க விரும்புகிறேன் என்று தொடங்கினார், கைத்தடியின் தேவை இன்று அவசியமானது என்று உணர்கிறோம்! அத்தோடு மட்டும் அல்லாமல் இந்த சமூகத்தின் மீதான பற்றை; எங்களுக்கானப் பசியாக உணர்கிறோம் அதற்கான உணவை இப்போது தேடி வருகிறோம், தொடர்து உங்களோடு இணைந்து பயணிப்போம் அதில் மாற்று கருத்து இல்லை என்பதனை முன்வைத்து பேசினார். இவ்வளவு நாள் நேரடியாக மற்றும் மறைமுகமாக உதவிய அனைவருக்கும் நன்றிகள் என்று கண்ணீரோடு உரையை முடித்தார்.

இறுதியாகக் கா.தமிழரசன் அவர்கள் நன்றிஉரை கூறினார்...

நிகழ்ச்சி இறுதியாகச் சிறப்பு அழைப்பாளர்கள், விருந்தினர்கள் நண்பர்கள், வாசகர்கள் என அனைவரும் ஒரே இடத்தில் ஒன்றுகூடி உணவு அருந்தி மகிழ்ந்து கலைந்து சென்றனர். (ஒரு குடும்ப விழாவாக அமைந்தது குறிப்பிடத்தக்க ஒன்று) ●



விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்கள்...



▪ மே 3 (1898) – ராஜம் அய்யர், (இரண்டாவது தமிழ் நாவலான 'கமலாம்பாள் சரித்திரம்' எழுதிய எழுத்தாளர்.) – நினைவு தினம்

# படிக்கும் மாணவர்கள் அரசியலில் ஈடுபடுதல் சரியா?




மாணவப் பருவம் என்பது ஒரு தனி நபரின் வாழ்வில் முக்கியப் பருவம். எதையும் ஏன் ?எதற்கு? என்று ஆராயும் பருவம். பள்ளிக் கல்வியோடு இந்த உலக நடப்பினையும் உற்று நோக்கும் திறன் எட்டிப் பார்க்கும் பருவம். பகுத்தறிவைப் பயன்படுத்தத் தெரிந்து கொள்ளும் பருவம். எந்த ஒரு செய்தியையும் அப்படியே கண்மூடித்தனமாக நம்பாமல்

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு. "

எனும் திருவள்ளுவரின் கூற்றைப் புரிந்து பயிற்சி எடுக்கும் பருவம். நம் வாழ்வில் முதல் 20 ஆண்டுகள் நாம் கற்கும் பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வியே எஞ்சியிருக்கப்போகும் நம் வாழ்நாட்களில் நம் வாழ்வை நடத்த பொருளாதார பலம் தரக் கூடியது. அந்த கல்வி கற்கும் பருவத்தில் சமூக நடப்பை, சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் குறித்த பார்வையை நாம் வளர்த்துக் கொள்ளலாமே தவிர்த்து நேரடி அரசியலில் ஈடுபடுவதை தவிர்த்தல் நலம்.

**இன்னும் சற்றே ஆராய்ந்து பார்த்தால் அரசியல் கட்சிகள் பற்றிய ஒரு வெறுப்பு தன்மை மாணவர்களிடம் இருப்பதைப் பார்க்க முடிகின்றது. அந்த வெறுப்பே இன்றும் பல மாணவர்கள் தேர்தலில் வாக்கு அளிக்காமல் வெற்று வியாக்கியானம் பேச வைக்கின்றது. இந்தப் போக்கை மாற்றும் நிலையில் மாணவர்களிடத்தில் அரசியல் பேசப்பட வேண்டும்.**

வழக்கறிஞர் ம.வீ. கனிமொழி

"மாணவர்கள் அரசியலில் பிரவேசிக்காமல் இருக்க வேண்டும் என்பதை நாமும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால், அவர்கள் தங்கள் சமூக விஷயங்களிலும் சுயமரியாதை விஷயங்களிலும் முன்னேற வேண்டியது அடிமைக் கல்வியைவிட முக்கியமானது."என்கிறார் பகுத்தறிவுப் பகலவன் அறிவு ஆசான் தந்தை பெரியார் அவர்கள்.

ஏன் தந்தை பெரியார் அவர்கள் மாணவர்களுக்கு நேரடி அரசியல் கூடாது என்கின்றார் என எண்ணிப் பார்த்திடும் போது, அய்யா அவர்களே அதற்கும் பதில் சொல்கின்றார்கள்;

"இளைஞர்கள் குழந்தைகளுக்குச் சமானமானவர்கள். சமீபத்தில் உள்ளதைப் பற்றுகிறவர்கள்; பின் விளைவை அனுபவித்து, அறியாதவர்கள். கண்ணோட்டம் விழுந்தால் பற்றிவிடுபவர்கள். எழுச்சி என்பது எங்கெங்குக் காணப்படுகின்றதோ கூட்டம், குதூகலம் என்பவை எங்கெங்கு காணப்படுகின்றனவோ அவற்றையெல்லாம் பற்றுவதும், அவை மறைந்தால் கைவிட்டுவிடுவதுமான குணமுடையவர்கள். வாலிபர்களுக்கு வெறும் உற்சாகமும், துணிவும், தியாக புத்தியும் மாத்திரம் இருந்தால் போதாது. நன்மை, தீமையை அறியும் குணமும், சாத்தியம், அசாத்தியம் அறியும் குணமும், ஆய்ந்து ஓய்ந்து பார்க்கும் தன்மையும் இருந்தால்தான் வாலிபர்கள் பொதுவில் பயன்படக் கூடியவர்கள் ஆவார்கள். வாலிபர்கள் சுயமாகச் சிந்திக்குமாறு பழக்கப்படுத்துவதேயில்லை; பகுத்தறிவை உபயோகிக்கச் சந்தர்ப்பமளிக்கப்படுவதே இல்லை; அறிவுக்கும், அனுபவத்துக்கும் சம்பந்தப்படுத்திப் பழகுவதேயில்லை. இத்தகைய நிலைமை மாறாதவரை, வாலிபர்கள் சுயமாகச் சிந்தித்துப் பார்த்து ஆராய்ந்து, தாங்களே ஒரு முடிவுக்கு வருவது முடியாததாகும்".

எவ்வளவு ஆழமானச் சொற்கள்?

வயதுக் கோளாறில் ஒரு செய்தியை பற்றிக்கொண்டு பின் அதில் ஒரு பற்றுதல் போன பின் அதற்கு நேர் எதிரான செயல்களில் ஈடுபடுவது என்பது மாணவர்களின், இளைஞர்களின் குணம், எனவே அறிவு கொண்டு ஆராய்ந்து ஒரு செயலைச் செய்ய அவர்களுக்கு மாணவப் பருவம் ஏதுவானதல்ல என்றே தந்தை பெரியார் கருதுகின்றார். அதில் முற்றிலும் உண்மையும் உள்ளது.

1965ஆம் ஆண்டு நடந்த இரண்டாம் கட்ட இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தை தந்தை பெரியார் அவர்கள் கண்டித்ததும் மாணவர்கள் ஈடுபாடு குறித்தே, ஏனென்றால் மாணவர்கள் படிக்கின்ற காலத்தில் இது போன்ற போராட்டங்களில் ஈடுபட்டு தங்கள் எதிர்கால வாழ்வினை கேள்விக்குறி ஆக்கிவிடக் கூடாது என்ற காரணத்தினால் தான். அதனை இன்று, தமிழர் வாழ்வில் அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொண்டு தமிழர்களை ஜாதியின் அடிப்படையில் பிரித்தாளும் ஆரியத்தின் சூழ்ச்சிக்கு ஏதுவாக தமிழ்த்தேசியம் பேசுகிறவர்கள் திரித்துக் கூறுகின்றனர்.

அண்டை மாநிலமான கேரளாவில் கல்லூரிகளில் மாணவர் அமைப்புகள் உண்டு, அந்த மாணவர் அமைப்புகள் அந்த மாநிலத்தின் பிரதான ஒரு கட்சியோடு தொடர்பில் இருக்கும். இணைந்து இயங்கும், அந்தச் சூழல் நம் மாநிலத்தில் இல்லை. மாணவர்கள் அமைப்பு அரசியலை பேசுவது என்பது அவர்கள் எதிர்கால அரசியல் முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்ற போதிலும், அதனை கல்லூரி, பல்கலைக்கழக நிர்வாகிகள் கவனமாகக் கையாளவும் வேண்டும். மாணவர்கள் அமைப்பைத் தூண்டி விட்டு வலது சாரிகள் நடத்தும் வன்முறைகளை, ஜாதிய படிமங்களின் மீட்டுருவாக்கத்தை நாம ஐஐடி போன்ற கல்வி வளாகங்களில் கண்டோம். விவேகானந்தரை, ராமாயணத்தை பேச அனுமதி ஒரு கல்வி நிறுவனத்திற்குள் உண்டு எனின் அதற்கு நேர் எதிர் சமத்துவ சிந்தனைகள் விதைக்கும் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் தத்துவங்களை எடுத்துச் சொல்லும் உரிமையும் இடதுசாரி சிந்தனை கொண்டோருக்கு உண்டு என்பதை இந்தச் சமூகத்திற்கு புரிய வைத்திட பெரியார் -அம்பேத்கர் படிப்பு வட்டங்கள் போன்ற அமைப்புகள் கல்லூரிக்குள் தேவை என்பதை மறுத்திட முடியாது. சமூக அரசியல் பேசுவது மாணவப் பருவத்தில் தேவையானது. ஆனால் நேரடி அரசியல் ஈடுபாடு கொண்டு செயலாற்ற அவர்கள் மனதாலும், சிந்தனையாலும் முதிர்ச்சி அடைய வேண்டி இருக்கின்றது. பலர் போராட்டங்களில் ஈடுபட்டு வழக்குகளைச் சந்தித்து தங்கள் கல்லூரி படிப்பினை குறித்த காலத்திற்குள் முடிக்க முடியாது திண்டாடுவதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.



இன்னும் சற்றே ஆராய்ந்து பார்த்தால் அரசியல் கட்சிகள் பற்றிய ஒரு வெறுப்பு தன்மை மாணவர்களிடம் இருப்பதைப் பார்க்க முடிகின்றது. அந்த வெறுப்பே இன்றும் பல மாணவர்கள் தேர்தலில் வாக்கு அளிக்காமல் வெற்று வியாக்கியானம் பேச வைக்கின்றது. இந்தப் போக்கை மாற்றும் நிலையில் மாணவர்களிடத்தில் அரசியல் பேசப்பட வேண்டும். மாற்றம் விரும்புகின்றவர்கள், தாங்கள் தங்கள் மக்களாட்சியின் ஓட்டு போடும் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படைத் தெளிவினை, தங்கள் முன்னேற்றத்திற்காக உழைத்த தலைவர்களின் வரலாற்றினை, இந்த இனம் கடந்து வந்த வெற்றிப் பாதையை மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டுவதே இந்நேரத்தில் தேவை. அந்த அடிப்படைப் புரிதலே பின்னாளில் அவர்களின் நேரடி அரசியல் ஈடுபாட்டிற்கு வலு சேர்க்கும். உணர்ச்சிகளின் அடிப்படையில், ஒன்று கூடுவது, பின் போராட்டங்களில் வன்முறையைச் செலுத்துவதும் ஆரோக்கியமான சமூகத்திற்கு ஏற்றது அல்ல. எனவே மாணவர்கள் ஒரு தவம் போன்று கல்லூரிக் காலங்களில் படித்து, அந்த படிப்போடு இந்த சமூக அரசியல் அறிவையும் கற்று, நேரடி அரசியல் களத்திற்கு பின் வருவதே அவர்களின் வளமான அரசியல் பாதைக்கு சரியானதாக இருக்கும்.

*The more informed you are, the less arrogant and aggressive you are "*

என்பார் கறுப்பின விடுதலைக்குப் போராடிய நெல்சன் மண்டேலா அவர்கள். அந்த அளவில் நிறைய செய்திகளை, சமூக அறிவைப் பெற்றுப் பின் அரசியல் களம் காணும் மாணவர்களே வன்முறையற்ற, திடமான, சமூகத்தை உருவாக்கிட முடியும். ●



# மன்னித்து விடு செல்லமே...

கனத்த மனதோடு மன்னிப்பு கேட்கிறோம். மன்னித்து விடு ஆசிபா. கையாலாகாத உடல் வலிமையை பெற்ற உன்னைப் போல் என்றோ ஒரு நாள் காமக்கொடூரர்களால் மடியும் நேரத்தை எண்ணி, பயந்து வாழ்க்கை நடத்தும் அக்காமார்கள் மன்னிப்புக் கேட்கிறோம். மன்னித்து விடு ஆசிபா.

நாங்கள் மன்னிப்புக் கேட்பது முதல் முறையல்ல. ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான மொட்டுக்கள் உதிரும்போதும் மன்னிப்புக் கேட்டுதான் கடக்கிறோம். ஆனால், உனது கொடூரக் கொலையை எங்களால் அவ்வளவு எளிதாக கடக்க முடியாது. உறக்கத்தில் எழுப்பி எங்களை கேள்வி கேட்கிறாய், நான் என்ன தவறு செய்தேன்? என்று, வீதியில் நடக்கும்போது பிஞ்சு குழந்தைகள் எல்லாம் எங்களை காரி உமிழ்கிறது என்று எங்களுக்கு இந்த நிலை வருமோ? என்று கேள்வியோடு பதில் சொல்ல முடியாமல் நகர்ந்த போது எங்களை அறியாமல் கோவில்களைப் பார்த்து காரி உமிழ்ந்து, கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி தான் என்று பகிரங்கமாகச் சொல்லி நகர்கிறோம்.

2. தவறு செய்தது யார்? எங்கள் ஆசிபாவிற்குத் தெரியாது அவளுக்கென்று தனிப்பட்ட பெண் உறுப்புகள் இருக்கிறது என்று எங்கள் ஆசிபாவிற்குத் தெரியாது, பெண் என்பவர் குழந்தையாக இருந்தாலும் சரி சிறுமியாக இருந்தாலும் சரி தனியே இந்த இந்திய வீதிகளில் நடக்கக் கூடாது என்று, எங்கள் ஆசிபாவிற்குத் தெரியாது இங்கே காமக்களியாட்டங்கள் நடக்கிறது என்று எங்கள் மொட்டுக்குத் தெரியாது. ஆணாதிக்க வர்க்கம் மொட்டுகளை கசக்கத் தயங்காது என்று. எங்கள்

குழந்தைக்கு தெரியாது. இங்கே நடப்பது ராமராஜ்ஜியம், அதில் குழந்தை ஆரம்பித்து குதூகலமாய் உலா வரும் பெண்கள் வரை அனைவரும் பாலியல் பண்டங்கள் தான் என்று நிச்சயமாக எங்கள் ஆசிபாவிற்குத் தெரிந்திருக்காது. 'கோவில்களும், தேவாலயங்களும், மசூதிகளும் இங்கே விபச்சாரக் கூடங்களாக மாறிவிட்டது என்று.

3. இழிவான ஈனப்புத்தி கொண்ட அக்கயவர்கள் இனிப்பு தருகிறேன் என்று அழைத்துச் சென்றார்களோ எங்கள் செல்வத்தை? காமக்கொடூர கயவர்கள் கடவுள் காட்டுகிறோம் வா, என்று அழைத்தார்களோ எங்கள் குழந்தையை...

4. தாயின் வயிற்றில் பிறந்து, ஏதோ ஒரு சகோதரியோடு வளர்ந்த உங்கள் ஆணுறுப்புக்குத் தெரியவில்லை யாரிடத்தில் அதை புகுத்த வேண்டும் என்று. உங்கள் தாயின் மார்பில் பால் குடித்தபோது வராத காம புத்தி எங்கள் மழலையின் பிஞ்சு உடம்பை பார்த்ததும் வந்துவிட்டதா? உங்கள் சகோதரிகளின் உறுப்புகளை விட எங்கள் குழந்தை ஆசிபாவின் உடல் ஒன்றும் வளர்ந்துவிடவில்லையே? 8 நாட்களில் ஒரு நாள் கூட உங்களுக்கு உங்கள் குழந்தைகளின் முகம் நினைவுக்கு வரவில்லையா? கடவுள் சிலைதான் என்பதனால்தான் என்னவோ, பெண் கடவுள் சிலைகள் வன்புணர்வுக்கு ஆளாக்கப்படவில்லை.

5. ஆடையை வைத்து ஒரு பெண்ணின் கொலைக்கு நியாயம் கற்பிக்கும் கலாச்சாரக் காவலர்களே, சேலை அணிந்தால் எங்கள் மாராப்பு விலகி மார்பு தெரிந்ததால் வன்புணர்வு என்கிறீர்கள்: பாவாடை அணிந்தால் தொடை தெரிந்ததால் வன்புணர்வு என்கிறீர்கள்: சுடிதார் அணிந்தால் உடலமைப்பு உங்களை இழுக்கிறது என்கிறீர்கள்: முழுவதுமாக மூடி மறைத்து பர்தா அணிந்தால் கை, கால் நகங்களும், விரல்களும் தெரிவதால் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டாள் என்கிறீர்கள். நீங்களே பதில் கூறுங்கள் எங்கள் ஆசிபாவின் ஆடையில் என்ன கவர்ச்சியைக் கண்டீர்கள்? எங்கள் குழந்தையின் எந்த உறுப்பு உங்களை அவளை வன்புணர்வு செய்யத் தூண்டியது?

6. மீண்டும் மீண்டும் உறுதி செய்கிறீர்கள் பெண்ணின் நிறமோ, உடையோ, வயதோ, உடல் திடமோ, கவர்ச்சியோ, நடையோ உங்களை பாலியல் வன்கொடுமைக்குத் தூண்டவில்லை, செத்த பிணமாக இருந்தாலும் சடலத்தின் மேல் 'பெண்' என்ற வார்த்தை, ஒற்றை வார்த்தை எழுதியிருந்தால் போதும், அதையும் இந்தக் காவிக் கயவர்கள், காமக்கொடூரர்கள், இந்து ராஜ்ஜியம் அமைக்கத் துடிக்கும் ஈன பி.ஜே.பி., ஆர். எஸ்.எஸ். சங்பரிவார் கூட்டங்கள் விடாது என்று.

7. உங்கள் மனுதர்மத்தில் பெண்கள் 'பாவயோனியில்' பிறந்தவர்கள் என்று எழுதியிருக்கிறது. அந்த பாவயோனியால் தான் உங்களை போன்ற பாவிகள், அப்பாவிக் குழந்தைகளைச் சூறையாடுகிறீர்கள்.

8. மாதவிடாய் தீட்டு என்று சொன்னீர்கள். அந்த மாதவிடாயின் உதிர கழிவுகள் வெளியேறும் வலியினை கூட இதுவரை எங்கள் ஆசிபா அனுபவித்திருக்கமாட்டாள். அப்பிஞ்சு குழந்தையின் உறுப்பில் எப்படி நுழைக்கத் துடித்தீர்களோ உங்கள் ஆணுறுப்பை? எங்கள் செல்வத்திற்கு தெரியாது அவளும் ஒரு பெண், அவளுக்கும் அப்படியெல்லாம் மறைக்கப்பட்ட துவாரங்கள் இருப்பது. உங்கள் ஆணாதிக்கத்தை பறைசாற்ற துடிக்கும் 'ஆணுறுப்பை' ஒருமுறை ஒருவனுக்கு துண்டித்தால் ஒழிய, உங்கள் அட்டூழியங்கள் ஓயாது.



9. தேசியக் கொடி ஏந்தி வீதிக்கு வந்து ஆசிபாவைக் படுகொலைச் செய்த தேசத்தியாகிகள், பாரத மாதாவின் பி.ஜே.பி பிள்ளைகளுக்காக கொடி தூக்கும், தேசியக் கொடித் தூக்கும் ஈனப்பிறவிகளே, உங்கள் பாரத மாதாவும் பெண்தான், உங்கள் பல கோடி கற்பனை கடவுள்களும் பெண்தான், அவர்களைப் புணர்ந்து விட்டு வாருங்கள், எங்கள் கோவண துணிதான் உங்கள் தேசியக் கொடி என்பதை நிரூபிக்கிறோம்.

10. எட்டு நாட்கள் கருவறையை விட்டு வெளியே வந்து எங்கள் குழந்தையை காப்பாற்றாத உங்கள் கடவுள்களா இனி எங்களைக் காப்பாற்றப் போகிறது. உள்ளே இருந்த இந்து கடவுளுக்கு பிடிவாதமோ? வேற்று மதக் குழந்தையை எப்படிக் காப்பாற்றுவது என்று.

11. ஆசிபாவின் மரணம் மனதை ரணப்படுத்தி ஏங்க வைக்கம் நேரத்தில், அதிலிருந்து மீள்வதற்குள் குஜராத்தில் இன்னொரு பெண் குழந்தை. பாரத மாதா பெருமை பேசும் பைத்திய அயோக்கியர்களே, நிச்சயம் எங்கள் கையில் சட்டம் இருந்தால் உங்கள் ஆணுறுப்பை எல்லாம் துண்டித்து வீதியில் எறிவோம். கையாலாகாத சட்டமும், கேடுகெட்ட மத்திய அரசும், வாய்மூடி மௌனியாய் இருக்கும் சமூகமும் ஒன்று சேர்ந்து மன்னிப்புக் கேளுங்கள் எங்கள் ஆசிபாவிடம். வீடுதோறும் எழுதுங்கள்.

'இது குழந்தைகள் வாழும் இல்லம்

காவிகளுக்கும், காலிகளுக்கும் இடம் இல்லை" என்று.

12. வலியை மட்டும் பேசினால் மீண்டும் ஒரு ஆசிபாவைப் பலிகொடுக்க நேரிடும். குறைந்தபட்ச தற்காப்புகளை, தற்காப்புக் கலைகளையாவது கற்றுக்கொடுங்கள் பெண் பிள்ளைகளுக்கு. பெண் என்ற பாலியல் பேதத்தை உண்டாக்காமல், அதே நேரத்தில் பாலியல் கல்வியை கற்றுக் கொடுங்கள். கத்தியை கொடுத்து பெண் பிள்ளைகளை வெளியே அனுப்புங்கள். தொட வரும் ஆணாதிக்க அயோக்கியனை துண்டிப்பது (ஆணுறுப்பை) எப்படி என்று கற்றுக் கொடுங்கள்.

13. சாதியம், மதவாதம், ஆணாதிக்கம் எதுவாக இருந்தாலும் சரி இங்கே பலிக்கு ஆளாக்கப்படுவது என்னவோ பெண்கள்தான்? பெண் குழந்தைகள் ஆரம்பித்து வயது முதிர்ந்த பெண்கள் வரை தற்காப்புக் கலை பயின்று மன வலிமையோடு ஆணாதிக்க, மதவாத சிந்தனையை வேரறுக்கும் வரை அனைவரும் வெட்கித் தலைகுனிந்து மன்னிப்புக் கேட்போம். மன்னித்துவிடு ஆசிபா, மன்னித்து விடு எங்கள் செல்லமே. ●



# நியமனங்களும் சமூக நீதியும்

கல்வி மற்றும் வேலைவாய்ப்பு மூலமாக சமூகநீதியை நிலைநாட்டிய சமூகநீதி வேரூன்றிய மண்ணிலிருந்து சமூகநீதியை எவ்விதத்திலேனும் சமூகநீதியை சீர்குலைத்து மீண்டும் வர்ணாசிரம பேதத்தை நிலைநாட்டிட ஆட்சியதிகாரத்தின் துணைகொண்டு செயல்பாடுகளை தீவிரப்படுத்தியுள்ள கூட்டம் நீட் நுழைவுத்தேர்வை நுழைத்து சாமான்ய மற்றும் நடுத்தர வர்க்க மாணவர்களின் உயர்கல்விக்கனவை தகர்த்துவிட்டு, அடுத்ததாக கல்வித்துறை நியமனங்களைக் குறிவைத்து காய் நகர்த்துகிறார்கள்.

## சட்டமும் மனுநூலும்

அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தில் காலியாக இருந்த துணைவேந்தர் பதவிக்கு தமிழகத்தைச் சேர்ந்திராத, இங்குள்ள சமூகநீதிக் கொள்கைக்கு எதிரான கருத்துடைய பார்ப்பனிய ஆதரவாளரான சூரிய நாராயண சாஸ்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இந்திய அளவில் நீதித்துறையின் ஒருசாரர் மனுநூலை முன்னிறுத்தி தீர்ப்பு எழுதுவதும் கருத்துக்கள் வெளியிடுவது போன்ற வழக்கங்களை அநாசாயமாக மேற்கொள்ளுகிறபோது மனுநூலையே முற்றுமுச்சாக நீதியென நம்புகிறவர்களை கொண்டுவந்து நியமித்துவிட்டமையின் விளைவுகளை எப்படி எதிர்கொள்வது?

மனுநூலில் உள்ளவற்றை சட்டக்கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியில் பேச மாட்டார்கள், மனுநூலே அனைத்து சட்டங்களுக்கும் முன்மாதிரி சட்டம் என கற்பிக்கப்படாது என்பதையும் எவ்விதத்தில் நம்பிக் கொண்டிருக்க முடியும்?

மனுநூல் தானே ஒவ்வொரு வர்ணத்தாருக்கும் தனித்தனி நீதி என சொல்லியிருக்கிறது. கொலையை மேல்வருணத்தான் செய்தால் புறங்கை ரோமங்களை மழித்தால் போதுமெனவும் கீழ்வருணத்தான் செய்தால் சிரச்சேதம் செய்துவிட வேண்டுமென்ற சமத்துவமான நீதிக்கு எதிரான அடுக்கடுக்கான முரண்பாடுகளைக் கொண்டுள்ளவற்றை நூலாகக் கொண்டுள்ள மனுநூல் சட்டத்துறையில் முழுமையாக ஊடுருவினால் நீதியின் போக்கு என்னவாகும் என்ற எதிர்கால ஆபத்தை உணர்ந்து அதனை அறவே நீக்க அடுத்தகட்ட நடவடிக்கை தேவைதானே!

## நுண்கலையும் வேதமும்

தமிழ்நாடு கலை மற்றும் நுண்கலை பல்கலைக்கழகத்திற்கு காலியாக இருந்த பதவிக்கு கேரளத்தைச் சேர்ந்தவரும் ஆர்.எஸ்.எஸ். பின்புலத்தை கொண்டவருமான பிரமிளா குருமூர்த்தி துணை வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.கிராமிய இசைகள் புறந்தள்ளப்படுவதாக அவ்வப்போது நுண்கலைத்துறை மீது குற்றச்சாட்டு எழுந்திருக்கும் சூழலில் இப்போதைய துணைவேந்தரால் இங்கேயுள்ள நிலை மேலும் தீவிரமடையும் சூழலே உருவாகும்.

இசைகளும் நுண்கலைகளும் வேத காலத்தில் தோன்றியவை என முலாம் பூசப்படலாம்.

தெ.ரெங்கராசன் என்கிற திராவிடராசன்



தமிழகத்தில் இயங்குகின்ற நுண்பல்கலைக்கழகம் வேதகால இசை, கன்னட சங்கீத போன்றவற்றின் ஆய்வுகளுக்குக் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்ற ஆபத்து இதில் உள்ளது. முன்னமே தமிழகலைகளுக்கும்,கிராமிய பண்பாட்டு இசைகளுக்கும்குறைந்த அளவே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்ற சூழலில் அந்த பல்கலைக்கழகம் அதனை ஆரம்பிக்கப்பட்டதற்கான நோக்கத்திற்கு எதிராக இயங்கக்கூடிய சித்தாந்தம் கொண்டவர்களை நியமித்து இப்போதைய சூழலுக்கு மேலும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பொறியியலும் புராணங்களும்

இரண்டாண்டுகளாக துணைவேந்தரே இல்லாமல் மந்தமான சூழலில் இயங்கிய அண்ணா பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தர் தேர்வுக்காக தமிழுணர்வல்லாத நீதிபதி வி. எஸ். சிர்புர் தலைமையில் தேடுதல் குழுவை அமைத்தபோதே சிக்கல் எழும் என நினைத்த எண்ணத்தை சற்றும் சிதறடிக்காமல் துணைவேந்தர் நியமிக்கப்பட்டு சிக்கலை உருவாக்கிவிட்டார்கள்.

170பேர் விண்ணப்பம் செய்ததில் கடைசியாக எட்டு நபர்களை தேடுதல் குழு நேர்காணல் செய்து அதிலே மூன்று நபர்களை தேர்வுசெய்து ஆளுநருக்கு அனுப்பிவிட, அதிலே கவனமாகத் தமிழ்நாட்டை சேர்ந்திராதவரும், பெங்களூரு இந்திய அறிவியல் துறையின் மெட்டீரியல் எனர்ஜி துறை கவுரவப் பேராசிரியராக பணிபுரிந்த சூரப்பா அவர்களை நியமித்தது. சர்வதேச அறிவியல் மாநாட்டில் புட்பக விமானமே தற்போதைய விமானத்தின் முன்மாதிரி என பேசிய பேராசிரியர்கள் உள்ள நாட்டில் இதுபோன்ற நிலைகளை மேன்மேலும் தீவிரப்படுத்தி பிற்போக்குவாத கருத்துக்களை உயர்கல்வி நிறுவனங்களில் பரவிடச் செய்யும் உள்நோக்கத்துடன் அடுத்தடுத்த நியமனங்களை செய்கிறார்கள்.

நாட்டில் உள்ள 16 மத்திய பல்கலைக்கழகங்களில் ஒன்றில்கூட தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படாத சூழல் நிலவுகிறது. திட்டமிட்டு சட்டம், கலை, பொறியியல் என முப்பெரும் துறைகளிலும் தமிழகத்தைச் சேர்ந்தவர்களைப் புறக்கணித்து அயல் மாநிலத்தவரை நியமித்திருப்பது உயர்கல்வியின் போக்குகளை மாற்றிவிடும் பேராபத்துடன் அனேக வேண்டிய, கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும்.

தமிழகத்தில் பல்துறைகளிலும் எண்ணற்ற முனைவர்களும்,பேராசிரியர்களும் நிறைந்திருக்க அயல் மாநிலத்திலிருந்து ஒவ்வொரு துறைக்கும் துணைவேந்தர்களைத் தேட வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் ஏற்பட்டது? உயர்கல்வி நிறுவனங்களில் இதுபோன்ற போக்குகள் தொடருமானால்,அது சமூகநீதி கொள்கையிலான உயர்கல்வியின் நோக்கத்தை சீர்குலைத்துவிடும் என்பதை உணர்ந்து, நியமனங்களில் மாநில முன்னுரிமை நிலைநாட்டி சமூகநீதியை நிலைநாட்டுவதே சாலச்சிறந்த நடவடிக்கையாகும். •

பேரா. பழ.வெங்கடாசலம் மேஜிக் கலைஞர்

# மந்திரமா? தந்திரமா?



## துண்டு சீட்டில் எழுதியதை பிரித்துப் பார்க்காமல் படித்துக் காட்டுதல்.

### தேவையானப் பொருட்கள்

ஒரேஅளவில் 2''×2'' உள்ள சில துண்டு வெள்ளைத் தாள், மற்றும் ஒரு காலி டப்பா.

### மேஜிக் செய்யும் முறை

மேஜிக் செய்யும் முன் பார்வையாளர் களை உற்சாகப்படுத்தி ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். “நாம் புத்தகத்தைப் பார்த்து படிப்பதே கடினம். இப்ப என் மேஜிக் திறமையால் உங்களிடம் தரப்பட உள்ள துண்டு தாளில் நீங்கள் உங்களுக்கு பிடித்த தலைவர் பெயர் அல்லது ஓரிரு வார்த்தைகள் எழுதி யாரிடமும் காட்டாமல் பேப்பரை சுருட்டி இந்த டப்பாவில் போடவும்'' என கூறவும். ஆங்காங்கே உள்ள சுமார் 10 அல்லது 15 பேரிடம் துண்டு பேப்பரை கொடுத்து எழுதச் சொல்லவும். பின்னர் அவற்றை நண்பர் மூலம் காலி டப்பாவில் சுருட்டி போடச் சொல்லவும்.

சேகரித்த டப்பாவை மேஜை மீது வைத்து நன்கு குலுக்கவும். பின் டப்பாவில் இருந்து ஒரு சீட்டை எடுத்து பிரிக்காமல் காதருகே கொண்டு சென்று தலையை அசைத்து ஏதோ காதில் கேட்பது போல் செய்யவும். இதோ ஒருவர் “காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திடு'' என்று எழுதி இருக்கிறார். இப்ப நம் எல்லோருடைய தேவையும் அதுதான் என பேசிக் கொண்டே சீட்டை விரித்து பார்த்து கையில் வைத்துக் கொள்ளவும். அடுத்த சீட்டை எடுத்துப் பிரிக்காமல் மீண்டும் சொல்லவும். இப்படியே சில சீட்டுக்களை படித்துக்காட்டும் போது இது யாருங்க எழுதியது என கேட்டு அவர்கள் கையை உயர்த்த இதை பார்க்கும் அவ்வளவு பேரும் ஆச்சரியப்படுவார்கள்.

### மேஜிக் இரகசியம்

முதலில் ஒரு சீட்டில் உள்ளதை காதருகே வைத்து கேட்பது போல் சொல்லி விட்டுப் பிரித்துப் படித்து மனதில் வைத்துக் கொள்ளவும்.

அடுத்த சீட்டை எடுத்துப் பிரிக்காமல் முதல் சீட்டில் எழுதி இருந்ததை சொல்லவும். இப்போது இந்த சீட்டைப் பிரித்து தெரிந்து கொண்டு அடுத்த சீட்டை எடுத்துப் பிரிக்காமல் இதற்கு முன் படித்ததைச் சொல்லவும். இப்படியே அனைவரையும் ஆச்சரியத்தில் அசத்துங்கள். •



▪ மே 7 – ஆஸ்துமா விழிப்புணர்வு தினம் – ரவீந்திரநாத் தாகூர் (நோபல் பரிசு பெற்ற வங்கக் கவிஞர்) பிறந்த தினம்



# தமிழ்நாடு இந்தியாவின் அண்டை நாடா?

இந்திய அரசு, ஆட்சியாளர்கள், இந்தியாவில் உள்ள மாநில உரிமைகளில், ஆட்சி அதிகாரங்களில் தலையிடுவதும் அத்துமீறிச் செயல்படுவதும் தனக்கு எல்லையில்லா அதிகாரம் உள்ளது என்ற நினைப்பில், தாங்கள் நினைத்தவாறெல்லாம் செயல்படலாம், செயல்பட முடியும் இதற்கு எந்தவிதமானதொரு தடையும் இல்லை என்ற எண்ணத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல் அவ்வாறு செயல்பட முடியுமா? அதற்கான அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறதா? என்றால்! பதில் இல்லையென்பதே! பிறகு இவ்வாறு அடாவடித்தனமாக செயல்படக்கூடிய காரணம்! மாநிலங்களுக்கென எந்தவிதமான உரிமைகளும் இருக்கக்கூடாது. குறிப்பாக மாநிலம் என்கின்ற ஒன்றே இருக்கக்கூடாது என்பதுதான் இன்றைய ஆட்சியாளர்களின் குறிப்பாக பா.ஜ.க.வின், (இதன் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்சின்) எண்ணம், விருப்பம், திட்டம் எல்லாம். இதே எண்ணம் கொண்ட அமைப்புகள் இந்துக்களின் நலனில் அக்கறை கொண்டவர்கள் என்ற போர்வையில் சுற்றிக்கொண்டிருக்கும் மதவாத அமைப்புகள், அல்லக்கைகள் நிறைய உள்ளன. இதுபோன்றவர்கள் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் இருக்கிறார்கள். அவர்கள் காங்கிரஸ்காரர்கள் அல்ல. பா.ஜ.க.வின் சிந்தனை கொண்ட காங்கிரஸ்காரர்கள்.

இந்தியாவில் மாநிலங்களற்ற, ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கடவுள், ஒரே ஆட்சியாளர்கள். அது அதிபர்கள் ஆட்சிமுறை, குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் மன்னராட்சிமுறை. இதில் தேர்தலெல்லாம் இல்லை. வாரிசுகள்தான் ஆட்சியாளர்கள். ஆசைப்படுவது சரி அதற்காக ஈனமானமில்லாமல் ஆசைப்பட்டால் எப்படி? இந்தியா முழுமைக்கும் ஒரே மொழியாக, ஒரே மொழி பேசும் மக்களாக, ஒரே கடவுள் அந்த ஒரேக்கடவுளை அனைவரும் ஒன்றாக ஒற்றுமையாக வணங்கவேண்டும். சூழல் அவ்வாறுதான் உள்ளதா? அவ்வாறு அனைவரும் ஒற்றுமையாக இருந்தால், அது உங்களுக்கே பிடிக்காதே! பிறகெப்படி?

நல்ல தலைவனுக்கு அழகு! எவ்வாறாயினும் மக்கள் ஒற்றுமைதான் பிரதானமென்று செயல்படுவான் காரணம் நாட்டில் வறுமை நிலையில் வாழ்வதைக்கூட புரிந்துகொள்ள முடியும் காரணம், இது புறக்காரணம். இதனை மிகச்சரியாக அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் செயல்பட்டால் மிகவிரைவில் வறுமையை ஓட்டிவிட, ஒழித்துவிட முடியும். அப்பவும், ஏன் அனைத்திற்கும் அடிப்படை இந்த ஒற்றுமைதான். இதை நாட்டில் ஏற்படுத்துவதுதான் அவசியம். ஏனெனில் நாட்டில் ஒற்றுமையில்லாமல், வேறுபட்டு இருப்பதற்கு அகக்காரணம்தான் முழுமுதற்காரணம். அதாவது நாம் அன்றாடும் கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள், நமது சிந்தனை தனித்தனியாக இருப்பதே தங்களுக்கான தகுதி, மரியாதை, உயர்ந்தவனென மூளையில் ஏற்றிவிடப்பட்டுள்ள விஷமப்பிரசாரத்தை, நயவஞ்சக திட்டத்தை உண்மையென நம்பி மக்கள் தனித்தனியாக ஒதுங்கி இருப்பது, ஒதுக்கி வைத்திருப்பது. இதை, இந்த மக்களும் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் இதை ஏற்றுக்கொண்டதுதான், இந்தக் கயவர்களின் வெற்றி. அது இனியும் காலமெல்லாம் இவ்வாறே இருக்க வேண்டுமென்பதுதான் இந்தக் கயவர்களின் விருப்பம். தவறி, மக்கள் ஏதாவதொரு தலைவனாலோ அல்லது தன்னெழுச்சியாகவோ ஒன்றுபட்டால் அது இதுபோன்ற மக்களைப் பிரித்தாலும் சூழ்ச்சிகொண்ட கட்சி, அமைப்புகளுக்குப் பிடிக்காது. மக்களுக்குள் ஒற்றுமை அறவே இருக்கக்கூடாது ஆனால் நாடு மற்றும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பார்கள். மன்னிக்கவும், ஒற்றுமையாக அல்ல! ஒரே மாதிரி மன்னரின் கட்டளைக்கு அடிபணிந்து நடக்கும் அடிமைபோல் இருக்க வேண்டுமென்பது. இதுவே இவர்களின் இவர்கள் கூறும் ஒற்றைதே(சிய)சம்.

இவர்களுக்கு ஒன்று விளங்கவில்லையா? இல்லை இது அவசியமில்லையென்று நினைத்துவிட்டார்களா? தெரியவில்லை. இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களும் அவர்களின் தனித்த அடையாளங்களோடு, சுயமரியாதையோடு, அவர்களின் உரிமைகளோடு வாழும் முழு அதிகாரத்தை, அந்தந்த மாநில மக்களுக்கு அளித்தால்தான் இந்தியா என்ற ஒன்று இப்படி கூட்டாக இருக்கும். ஒற்றைதேசம் என்று கூவிக்கொண்டிருக்கும் கூட்டத்தாருக்கு ஒரு சிறிய வேண்டுகோள். நாட்டில் உள்ள அனைத்து மக்களையும் ஒரேமாதிரி ஆக்குவதற்கு முன்னோட்டமாக நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும், இது வேண்டாம் அனைத்து தேசிய கட்சிகளையும், இதுவும் வேண்டாம், பா.ஜ.க மற்றும் காங்கிரஸ் இந்த இரு கட்சிகளையும் ஒன்றிணைத்து, ஐந்து ஆண்டுக்கு காங்கிரசில் உள்ளவர்கள் யாராவது தலைவராகவும் நாட்டை ஆள்பவர்களாகவும் இருந்து, நாட்டை வழி நடத்தட்டும், அதன்பிறகு அடுத்த ஐந்து ஆண்டுக்கு பா.ஜ.க மீதிபணியைத் தொடரும் என்ற எண்ணத்திற்கு ஒற்றை தேசமென கூக்குரலிடும் கும்பல்கள் இதை ஏற்பார்களா? முடியுமா? முடியாதது மட்டுமல்ல, இதை ஏற்கவே முடியாது என்பதோடு கோபம் தலைக்கு சுர்ரென்று ஏறும்.

அதுபோலவே, ஏன்? அதைவிட பலமடங்கு கோபம்தான் எங்களுக்கும் வருகிறது. நீங்கள் ஒற்றை அடையாளத்துடன், ஒற்றை பழக்கவழக்கங்கள் கொண்ட, ஒற்றைக் கடவுள், ஒரே மாதிரியான காவி நிறம் கொண்ட இந்(தியா)துத்துவா நாடு என்று சொல்லும்போது.

இந்தியா என்பது தனித்த அடையாளத்தையோ அதிகாரத்தையோ கொண்ட தேசமல்ல என்பதற்கு இந்திய அரசிலமைப்புச் சட்டமும், தேர்தல் முறையும் சான்று. (தேர்தலில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் வேண்டும்,

தேர்தல் சீர்திருத்தம் வேண்டுமேன்பெது ஒருபுறம், இந்த அரசுகளின் செயல்பாட்டால் இன்றுள்ள தேர்தல் முறையே வேண்டாமென்று கூக்குரலும் ஒருபுறம் ஓங்கி ஒலிக்கிறது.) இது ஒருபுறமிருக்க மேலே சொன்னவற்றைப் பார்ப்போம்.

இந்திய அரசாங்கத்திற்கு பிரதமரும் மற்ற அமைச்சர்கள் அனைவரும் வேண்டுமென்றால் இதற்கு மக்களவைக்கு நடைபெறும் தேர்தலில், இந்தியா முழுமைக்கும் உள்ள அனைத்து மாநில மக்களும், அந்தந்த மாநிலங்களில் தங்களுக்குப் பிடித்த எதாவது ஒரு தனிநபரையோ அல்லது எதாவது ஒரு கட்சியைச் சார்ந்த வேட்பாளரையோ ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுத்து மக்களவைக்கு அனுப்பினால்தான், பிரதமர் மற்றும் அமைச்சர்கள், உள்விவகாரம், வெளிவிவகாரம், திட்டம், சட்டம் மற்றும் இந்திய நாட்டின் பிரதமர் இந்தியாவில் சுற்றிப் பார்ப்பதா? இல்லை மறுபடியும் இந்தப் பதவியும் அதிகாரமும் கிடைக்குமோ, கிடைக்காதோ? வாய்த்தபோதே உலக நாடுகளைச் சுற்றிப் பார்த்துக்கொள்ளலாம். ஒபாமா நம் நாட்டுக்கு வந்தால் அவர் வேண்டுமானால் ஒரு நாளைக்கு ஒரு ஆடை அணியட்டும் நாம் மூன்று, நான்கு ஆடை அணியலாம். அதிலே நமது பெயர் பதித்த ஆடையைகூட அணியலாம் எவன் கேட்பான், எவன் அப்பன் சம்பாதித்த துட்டு. எவனோ கஷ்டப்பட்டு வேர்வையை, ரத்தத்தை சிந்தி சம்பாதித்த, வரிகட்டிய பணம்தானே. இதில் நமக்கென்ன! இங்கே வந்தது நஷ்டம், கஷ்டம். போடா எவன் கேட்பான்? அப்படியே கேட்டாலும் நாம் அவர்களை கண்டுகொள்ள வேண்டுமா என்ன? நமக்குத்தான் காதே கிடையாதே, வாய் மட்டுந்தான் உள்ளதென இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மக்களே புரிந்துக் கொண்டார்கள். நமக்கென்ன நாம் கடிவாளம் கட்டிய குதிரை. நமக்குத் தெரிந்ததை, நாம் செய்ய நினைப்பதை எதைப்பற்றியும் கவலைப்படாமல் செய்கின்ற வேலையை செய்துகொண்டே இருப்போம்.

பேராபத்துகள் கொண்ட திட்டமென பல மாநிலங்கள் எதிர்க்கின்றனவா அப்படியென்றால் அந்தத் திட்டத்தை தமிழ்நாட்டுக்கு அனுப்பு. பெருவெள்ளம் வந்து நிறைய மக்களெல்லாம் வீடுவாசல் இல்லாமல் வீதியில தவிக்கின்றார்கள் அய்யா! ''கண்டுக்காத''. தமிழ்நாட்டு முதல்வர் பாதிப்புக்குண்டான நிவாரண நிதி கேட்கிறாங்கையா! ''கம்முனுகெட.'' அய்யா மழையில்லாம விவசாயம் பண்ண முடியல! ''அது வருணபகவானுக்கும் அவர்களுக்கும் உள்ள பிரச்சனை''. வறட்சியால பயிரெல்லாம் கருகிப்போச்சியா! ''அது அக்னிப்பகவானுக்கும் அவர்களுக்கும் உள்ள பிரச்சனை''. தமிழக மீனவர்களை இலங்கை ராணுவம் அடித்து விரட்டுகிறார்கள், சுடுகிறார்கள் நிறையப்பேர்கள் இறந்தும் இருக்கிறார்கள்! ''அது தமிழ்நாட்டுக்கும், இலங்கைக்கும் உள்ள பிரச்சனை.'' ஆந்திராவில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுகிறார்கள், செம்மரம் வெட்டினார்கள் என்று இருபது தமிழர்களை ஆந்திர வனத்துறை சுட்டுக்கொலை செய்துள்ளனர். ''அது தமிழ்நாட்டுக்கும், ஆந்திராவிற்கும் உள்ள பிரச்சனை.'' கர்நாடகா காவிரி நீரைத் தமிழ்நாட்டுக்குத் தர மறுக்கிறார்கள் மேகதாதுவில் புதிய அணைகட்ட முயற்சிக்கிறார்கள் ''அது தமிழ்நாட்டுக்கும், கர்நாடகாவிற்கும் உள்ள பிரச்சனை.'' முல்லைப்பெரியார் அணையிலிருந்து கேரளா தமிழ்நாட்டுக்கு தண்ணீர் தர மறுக்கிறார்கள் ''அது தமிழ்நாட்டுக்கும், கேரளாவிற்கும் உள்ள பிரச்சனை.''

அய்யா! ''என்னய்யா''? இதுமட்டுமல்ல இதுமாதிரி எல்லா மாநிலங்களிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டுல ஏகப்பட்ட பிரச்சனை! ''சரி.'' என்ன சரின்னு எனக்குப் புரியலையா?



இப்படியே போனா அனைத்து மக்களும் செத்துவிடுவார்கள். நீ இப்பத்தான் விசயத்திற்கே வந்திருக்க. ''அதுதானையா நம்ம ஆசை விருப்பம் எல்லாம்.'' அப்புறம் எதற்கு இந்த நாட்டுக்கு பிரதமரென நீங்களும் மற்ற அமைச்சர்களும் பிறகு இந்த மக்களுக்கு யார்தான் நல்லது செய்வது? பாதுகாப்பது? ''யார்ரா இவன்''? இருக்கிற இடம் தெரியாத இருந்த, நம்மள இந்த நாட்டு மக்கள் முன்னாடி நிறுத்தி, இவர் நல்லவர், வல்லவர் குஜராத்தை வளரச்செய்தவர், நாடு வளர்ச்சிபெற, இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற இவரை பிரதமராக்குங்கள் என்று சொல்லி, பல ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்து, அதற்காகவே பல ஆயிரம்பேர் ஆட்களை நியமித்து ஊரில் உள்ள அனைத்து பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி, ட்விட்டர், பேஸ்புக், வாட்சப் என அனைத்திலும் என் முகம் தெரியும்படி செய்து, தினமும் மக்கள் ஏதாவதொரு வடிவத்தில் என் முகத்தைப் பார்த்தே ஆகவேண்டும், என்னைப்பற்றி பேசியே ஆகவேண்டுமென்ற சூழலை ஏற்படுத்தியதோடு என்னை இந்தப்பதவியிலும் அமர்த்திய கார்ப்பரேட் முதலாளிகளின் காலுக்கு நான் விசுவாசமாக இருக்கவேண்டுமா? அல்லது இந்த நாட்டு வீணாப்போன மக்களுக்கு விசுவாசமாக இருக்கவேண்டுமா? அய்யா இப்படி பேசினால் எப்படி! தேர்தல் வந்தா மக்களைப் போய்ப்பார்க்க வேண்டுமே? ''போய் பார்ப்போம்.'' உங்களுக்கு போட மாட்டாங்களே! ''பரவாயில்லை'' பிறகு எப்படி வெற்றி பெறுவீங்க? ''அடப்போடா ஈ.வி.எம் மெஷின் நம்ம கட்டுப்பாட்டில் இருக்கு அப்புறம் என்ன கவலை. போய் வேலையைப்பார்! ''போ நாம இப்படி பேசிக்கொண்டிருப்பதை எந்த கார்ப்பரேட் முதலாளிகள் பார்த்தால் கேட்டால் நம்மீது கோபித்துக்கொள்வார்கள்.''

இதுபோன்ற சூழ்நிலையில்தான் நம்மை ஆள்பவர்கள் வைத்திருக்கிறார்கள். இதுமட்டுமல்லாமல்! ''வளர்ச்சி என்கின்ற பெயரில்'' நமது மாநிலங்களில் உள்ள அனைத்து இயற்கை வளங்களைக் கொள்ளையடிப்பதோடு மட்டுமல்லாமல், இங்கு வாழும் மக்களைக் கொன்று குவிக்கின்ற வேலையையும் செய்து கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற சூழ்நிலையில் இந்த மண்ணையும், மக்களையும் அந்தந்த மாநிலத்தில் வாழும் மக்களே தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள வேண்டிய கடமையும், பொறுப்பும் தங்களிடமே உள்ளது, என்பதை உணர்ந்து செயல்பட வேண்டியுள்ளது. அதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன?

அனைத்து மாநில மக்களும் ஒன்றாகச்சேர்ந்து மக்களவைக்கு ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுத்து அனுப்பும் உறுப்பினர்கள் மூலம்தான் பிரதமர் மற்றும் அனைத்து அமைச்சர்களும் இந்த ஆட்டமும், இந்தக்கூத்தும் என்பதை மறந்து செயல்படுகிறவர்களுக்கு அவர்கள் உணரும்படி செய்தால்? எவ்வாறு? நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி இந்த மண்ணையும், மக்களையும் காப்பாற்ற வேண்டி அமைதியான முறையில் போராடினால் அதிகாரத்திலிருக்கின்ற திமிரில் அடக்குமுறையை ஏவிவிடும் அரசுக்கான அதிகாரத்தை அளிப்பது நாங்கள்தான்! என்பதை அமைதியாக, பெரும் புரட்சியாகத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும், மக்களும் ஒன்றுசேர்ந்து வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை புறக்கணித்தால்! என்ன நடக்கும்?

நடப்பதைப் பார்ப்போமா? •



▪ மே 9 (1857) – இந்தியாவின் முதல் விடுதலைப் போராட்டமான 'சிப்பாய் புரட்சி' நடைபெற்றது.

# மாட்டிறைச்சியும் மனிதக்கொலையும்!

## ஒரு வரலாற்றுப் பின்னணி

வேதகாலம் முதல் மாமிசப்பிரியர்களாய் இருந்த பார்ப்பனர்கள் மாட்டுக்கறியையும். மற்ற இறைச்சிகளையும் உண்ணும் பழக்கததை கைவிட்டு அதன் மூலம், சமண, புத்தத்துறவிகளைவிட தாங்கள் உயர்ந்தவர்கள் என்று சொல்லத்துணிந்தார்கள் என்பதற்கு அண்ணல் அம்பேத்கர் அவர்கள் காட்டிய ஆதாரங்களைப் பார்த்தோம். இவ்வாறு பார்ப்பனர்கள் சைவமாகி அதனடிப்படையில் சமூகத்தில் உயர்ந்த இடத்தைக் கைப்பற்றியதால் அவர்களைப் போல நடந்த கொள்வதன் மூலம் தங்களது உயர்சாதித் தன்மை பாதுகாக்கப்படும் என்று நம்பிய பார்ப்பனரல்லாத சில உயர் சாதியினர் தாங்களும் சைவ உணவர்களானார்கள். அடுத்த நிலையில் இருக்கும் பிற்படுத்தப்பட்ட (சூத்திர) மக்களோ மற்ற இறைச்சிகளைத் தவிர்க்க முடியாமல், மாட்டுக்கறியை மட்டும் உண்ணாமல் இருந்தால் உயர்சாதிக்கு இணையாகிவிடுவோம் என்று நம்பினார்கள். மாடுகள் அவர்களது விவசாயத்திற்குத் தேவை என்பதும் அதனுடனான உணர்வு ரீதியான பிணைப்பும் அவர்கள் மாட்டுக்கறியைத் தவிர்ப்பதற்கான கூடுதல் காரணங்களாகச் சொல்லப்பட்டன. ஆனால் அத்தகைய பாசமும் பிணைப்பும் அன்புடன் வளர்க்கும் ஆடுகள் மீது வராமல் போனதற்கு என்ன காரணம்?. மாடு தான் பார்ப்பனருக்கு செல்வம். ஆடு அல்ல. பார்ப்பனருக்கு எது உயர்ந்ததோ அதனை வணங்குவதே அடிமைச் சாதிகளுக்கு வழக்கம். அப்படி மாட்டுக்கறியை மட்டும் உண்ணாமல் தவிர்ப்பதன் மூலம் தனது விவசாயச்சாதிக்கான (சூத்திர சாதிகளின்) பெருமையையும், தாழ்த்தப்பட்ட பஞ்சம சாதிகளிடம் இருந்து தன்னை உயர்த்திக் கொள்ளும் வாய்ப்பையும் சூத்திரர்கள் தக்க வைத்துக் கொண்டார்கள். அதே நேரத்தில் தான் வளர்த்த மாட்டை அடிமாடாக விற்பனை செய்வதில் எந்த விவசாயிக்கும் தடையில்லை. அது ஒரு முதலீடும் லாபமும் சேர்ந்த வணிகமாகவே பார்க்கப்படுகிறது. மாட்டுப் புனிதம் தான் உண்ணாமல் இருப்பதுதான். மற்றவர்கள் உண்பதற்காக தன் மாட்டை விற்பதில் அது குறுக்கிடுவதில்லை.



சாதியின் ஏணிப்படியில் அனைத்து பாரத்தையும் சுமக்கும் நிலமற்ற கூலிச் சமுதாயமாக வாழ்கின்ற (தலித்துகளின்) பொருளாதார நிலை, ஆடு வளர்க்க முடியாத அதிக விலை கொடுத்து ஆட்டுக்கறி வாங்க முடியாத நிலை, மாட்டுக்கறியின் இயல்பான சத்தும் கொழுப்பும் தேவைப்படும் கடுமையான உழைப்பு இவை அனைத்தும் சேர்ந்து மாட்டுக்கறி மட்டுமே உண்ணும் சமூகச் சூழலை உறுதி செய்தது. மேலிருக்கும் மூன்று சாதிக்கும் மாடு வேண்டும், ஆனால் மாட்டின் உடல் வேண்டாம். மாட்டை பார்த்துக்கொள்ளஅதற்கு மருத்துவம் பார்க்க, செத்தால் சுமந்து செல்ல ஆட்கள் தேவை. அதில் பண லாபமும் பார்க்கும் வாய்ப்பை இழந்து விடாமல் செத்த மாட்டினை வாரி வழங்கும்வள்ளலாகக் காட்டிக் கொண்டு, அம்மாட்டின் இறைச்சியை உண்ணும் பழக்கத்தை இழிவானதென்று கட்டமைப்பு கருத்து ரீதியாகக் கட்டமைத்துக் கொண்டார்கள். மாட்டுக்கறி உண்பதால் தான் தீண்டாமை ஏற்பட்டது என்று வியாக்கியானங்கள் பிறந்தன. இந்த இடத்தில் தந்தை பெரியார் அவர்கள் பேசுவதைக் கொஞ்சம் கேளுங்கள்.

‘மாடு தின்பதும் மதுவருந்துவதும் நீங்கள் பறையர்களாக இருப்பதற்குக் காரணமென்று சொல்வது கொஞ்சமும் யோக்கியமான காரியமல்ல. மாடு சாப்பிட்டுக்கொண்டும், மதுவருந்திக்கொண்டும் இருப்பவர்கள் தான் இன்று உலகத்தையே ஆண்டுகொண்டிருக்கிறார்கள். தவிரவும் நீங்கள் மாடு சாப்பிடுவதன் குற்றம் உங்களைச் சார்ந்ததல்ல. உங்களை, மற்றவர்களைப் போல சரியானபடி சம்பாதிக்கவும் தாராளமாயச் சாப்பிடவும், தெருவில் நடக்கவும், தாராளமாய் எங்கும் போய் வேலைசெய்து சம்பாதிக்கவும் வழியில்லாமல் செய்துவிட்டதால், கொஞ்சப் பணத்தில் அதிக ஆகாரம் ஆகக்கூடியதான மாட்டு மாமிசத்தைப் புசிக்க வேண்டியதாயிற்று, மாட்டு மாமிசத்தை அனுமதிக்கும் மதத்தைச் சேர்ந்த முகமதியரிலும் கிறிஸ்தவரிலுங்கூட சிலர் கைப் பணந்தாராளமாயக் கிடைப்பதாயிருந்தால், ’நாங்கள் மாட்டு மாமிசம் சாப்பிடும் வழக்கம் இல்லை" என்று சொல்லி விடுகின்றார்கள், ஆதலால், நமது நாட்டில் மாட்டிறைச்சி சாப்பிடுவதற்குத் தரித்திரந்தான் முக்கிய காரணம். அல்லாமலும், மாட்டு மாமிசம் சாப்பிடுவது ஆடு, கோழி, மீன் பன்றி இவைகளை விட என்ன அவ்வளவு அதிகமான பாவமாய்ப் போய்விட்டது? கோழியும் மீனும், பன்றியும், எச்சிலையும் பூச்சி புழுக்களையும் அழுக்களையும் மலத்தையும் தின்கின்றன. இப்படி இருக்க, இதைச் சாப்பிடுகிற வடநாட்டு ’பிராமணர்கள்" முதல் தென்னாட்டு சூத்திரர்கள் வரை, நல்ல சாதியும் தொடக்கூடியவர்களாயும் இருக்கும்போது, புல்லும் பருத்திக்கொட்டையும் தவிடும் பிண்ணாக்கும் தின்கிற மாட்டின் இறைச்சி சாப்பிடுவதனால் மாத்திரம் எப்படி ஒரு மனிதன் தாழ்ந்தவனாவான்? அப்படிப் பார்த்தாலும் மாடு சாப்பிடுகிறவர்களை யெல்லாம் ’தொடாதே: தெருவில் நடக்காதே: குளத்தில் தண்ணீர் சாப்பிடாதே: ஊருக்குள் குடி இருக்காதே" என்று சொல்லுகிறார்களா? இது வேண்டுமென்றே வீணாய் உங்களைத் தாழ்த்தி வைப்பதற்காகச் சொல்லும் ஒரு யோக்கியப் பொறுப்பற்ற காரணமேயல்லாமல் உண்மையான காரணமல்ல என்பதுதான் எனது முடிவு.”

# வழக்கறிஞர் அ.அருள்மொழி - நேர்காணல் - தொடர்



இது எவ்வளவு உண்மையான கூற்று.

இனி பார்ப்பனர்கள் உட்பட சங்ககாலத் தமிழர்கள் எப்படி மாட்டுக்கறி உண்டார்கள் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளைப் பாருங்கள்".

## புறநானூற்றுப் பாடல்கள்

**1. (புறம் 14:12-19)**

சேரமான் செல்வக்கடுங்கோ வாழயாதன் கபிலர் கையைப் பிடித்து, 'உம் கை மெல்லிதாயிருக்கிறதே! காரணம் என்ன?" என்று கேட்டதற்கு

'புலவு நாற்றத்த பைந்தடி
பூநாற் றத்த புகைகொளீஇ ஊன்றுவை
கறிசோறுண்டு வருந்துதொழி லல்லது
பிறிதுதொழி லறியா வாகலின் நன்றும்
மெல்லிய பெரும தாமே.....
செருமிகு சேஎய்நிற் பாடுநர் கையே."

என்று அவர் கூறிய விடையால், கடைக்கழகக் காலத்துப் பிராமணனும் ஊனுண்டமை அறிப்படும்.

**2. புறநானூறு : 384**

கரும்பனூர் கிழான் என்னும் சிற்றூர்த் தலைவன் வழங்கிய விருந்து குறித்து நன்னாகையர் என்னும் புலவர் புறநானூற்றில் குறிப்பிடுவது...

'நிணம் பெருத்த கொழுஞ் சோற்றிடை
மண்ணாணப் புகழ் வேட்டு
நீர்நாண நெய் வழங்கிப்
புறந்தோனெந்தை யாமெவன்றொலைவதை
அன்னோனையுடைய மென்ப வினிவறட்கி
யாண்டு நிற்க வெள்ளி மாண்டக
உண்டநன்கலம் பெய்து நுடக்கவும்
தின்ற நன் பல் ஊன் தோண்டவும்
வந்தவைகலல்லது
சென்ற வெல்லைச் செலவறியேனே".....

கரும்பனூர்க்கிழான் வழங்கிய ஊன் கலந்த சோற்றுணவில் நீரை விட அதிகளவு நெய்யிட்டுச் சுவை மிகக் கூட்டி சூடு குன்றாது நாள்தோறும் தானும் உண்டு மற்றவர்களுக்கும் தந்தான். உண்ணமுடியாமல் மீதமான உணவை இலையோடு மடித்து எறிந்த நாட்களையும், பல்லில் சிக்கிக்கொண்டவற்றைத் தோண்டி எடுப்பதற்குமாகக் கழிந்த நாட்களையும் எண்ண முடியாது.

**புறநானூறு: 113**

3. மட்டுவாய் திறப்பவும், மைவிடை வீழ்ப்பவும்,
அட்டுஆன்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்
பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்ன: இனியே,

பாரி மாய்ந்தெனக், கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே:
கோல்திரள் முன்கைக் குறந்தொடி மகளிர்
நாறுஇருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே

(பறம்பு மலையே முன்பு, உன்னிடத்துக் கள் நிறைந்த தாழியின் வாய் திறந்தே இருந்தது. ஆட்டுக் கிடாவை வெட்டிச் சமைத்த கறியுடன் கூடிய கொழுமையான துவையலும் சோறும் குறையாது விரும்பிய அளவு அளிக்கும் முதிர்ந்த வளமும் இருந்தது. அவை மட்டுமல்லாமல் எம்மோடு நட்பாகவும் இருந்தாய, பெரும் புகழ் பெற்ற பறம்பு மலையே! இப்பொழுது, பாரி இறந்துவிட்டதால் கலங்கிச் செயலற்று நீர் வடியும் கண்ணோடு உன்னைத் தொழுது வாழ்த்தி, அழகிய திரண்ட முன்கைகளில் சிறிய வளையல்களை அணிந்த பாரி மகளிரின் மணமுள்ள கரிய கூந்தலுக்கு உரிமையுடையவரை தேடிச்செல்கிறோம்.)

## அகநானூற்றுப் பாடல்கள்

**1. குடவாயில் கீரத்தனார்: அகநானூறு (129):**

'கலங்கு முனைச் சீறூர் கை தலை வைப்பக்
கொழுப்பு ஆ தின்ற கூர்ம் படை மழவர்"

கொழுப்பு ஆ தின்ற"-கொழுத்த மாட்டினை (ஆ) மழவர்கள் சாப்பிட்டார்கள் என்கிறது அகநானூறு

**2. கருவூர் கந்தப்பிள்ளைச் சாத்தனார். அகநானூறு (309)**

'வயவாள் எறிந்து வில்லின் நீக்கி
பயம் நிரை தழீஇய கடுங்கண் மழவர்
அம்பு சேண் படுத்து வன் புலத்து உய்த்தெனத்
தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்
கொழுப்பு ஆ எறிந்து குருதி தூஉய்ப்
புலவுப் புழுக்குண்ட வான் கண் அகல் அறைக்"

கொழுத்த மாட்டினை வெட்டி வேப்ப மரத்தின் அடியில் கடவுளுக்கு காணிக்கையாக்கி அதன் ரத்தத்தை கீழே விட்டு, மாட்டுக் கறியை மழவர்கள் உண்டனர்.

5. சான்று (1) 'பண்டைத் தமிழ் நாகரீகமும் பண்பாடும்". தேவநேயப் பாவாணர் (2) புறநானூறு புலியூர் கேசிகன் உரை (3) தமிழர் வரலாறு. புலவர் கா.கோவிந்தன்.

**- நேர்காணல் தொடரும்**

# மாதவிடாய் கப்

# நில் கவனி செல்

மாதவிடாய் காலங்களில் நிகழும் உதிரப்போக்கிற்காக துணியினை பயன்படுத்துவது மெல்ல மெல்லக் குறைந்து *sanitary napkins* என்ற பேடுகளை நமது சமூகம் பயன்படுத்தப் பழகும் இவ்வேளையில், சுற்றுச் சூழல் பேணல் என்ற நிலையில் இருந்து பேடுகள் பயன்படுத்துவது சுற்றுச் சூழலை மாசுபடுத்தும், அதனைத் தயாரிக்கப் பயன்படுத்தும் பொருட்கள் செயற்கையாக உருவாக்கப்பட்டது, எளிதில் மக்காது என்ற காரணத்தினை முன்னிறுத்தி, பேடுகளுக்கு பதில் *reusable menstrual cups* (மறு உபயோகம் செய்யக்கூடிய மாதவிடாய் கப்) பயன்படுத்தலாமே என்று ஒரு சிலர் இப்பொழுது குரல் கொடுத்து வருகின்றனர். மாதவிடாய் கப்புகள் 50-60 வருடங்களுக்கு முன்பாகவே உலகில் பயன்பாட்டிற்கு வந்திருந்தாலும், அதைப் பயன்படுத்துவதில் உள்ள சிரமங்களால் பெரும்பான்மையான பயன்பாட்டிற்கு அது வரவில்லை. அதனால் தான் மேலை நாடுகளில் மாதவிடாயினை எதிர்கொள்ள பெண்களுக்கு இருக்கும் சாதனங்களின் பயன்பாடென்பது பேடுகளில் இருந்து நேராக *tampon* என்ற யோனியில் வழி உட்செலுத்தும் உறிஞ்சு பஞ்சினை நோக்கிச் சென்றது.

சமூக வலைத்தளங்களில் அண்மையில் மாதவிடாய் கப் குறித்து ஊடகப் பிரபலங்கள் நற்சான்றிதழ் கொடுத்து காணொளிகளை வெளியிட்டதைத் தொடர்ந்து, பெண்கள் பலருக்கு மாதவிடாய் கப் என்பது மருத்துவர்களால் அங்கீகரிக்கப்பட்டதா, நமது சூழலுக்கு ஏற்றதா, மறு உபயோகம் செய்யக்கூடியது என்பதால் இது நோய்த் தொற்று உருவாக வழிவகுக்குமா போன்ற போன்ற கேள்விகள் மனதினுள் எழும்பி, தங்கள் மருத்துவ நண்பர்களைக் கேட்க ஆரம்பித்தனர். அப்படி என் தோழி கேட்ட கேள்வியின் விளைவாக அமைந்தது தான் இந்த சிறு கட்டுரை.

மாதவிடாய் கப் என்று இணையத்தில் தட்டினால் பல விலைகளில், பல பிராண்டுகளில் இவை விற்பனைக்கு இருக்கின்றன என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். ஆக, இவற்றில் எது சிறந்தது ஏற்றது என்ற கேள்விக்கு பதில், பொதுவாய் இவை சிலிக்கோன் மற்றும் இயற்கை ரப்பரினால் செய்யப்பட்டவையாக இருக்கின்றது. இவ்விரண்டில் இயற்கை ரப்பர் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடியது என்பதனால் சிலிகோனால் தயாரிக்கப்பட்ட மாதவிடாய் கப்பினை நாம் பயன்படுத்தலாம். இதில் குறிப்பிடவேண்டியது என்னவென்றால் மார்க்கெட்டில் மலிவான, தரமற்ற சிலிகோன் மாதவிடாய் கப்கள் பல இருக்கின்றன என்பதனை கவனத்தில் கொள்ளவேண்டும். வழிகாட்டுதலுக்கு, உங்கள் மருத்துவரை அணுகுதல் நலம். 200 - 300 ரூபாய்க்கு விற்கப்படும் இவை, மருத்துவ உபயோகத்திற்கான தரத்துடனானவையாக இருப்பதில்லை என்பதை எப்போதும் நினைவில் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

மாதவிடாய் கப்கள் பயன்படுத்தும் பொழுது, கையினை சோப் கொண்டு நன்றாக சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். சிலிகோன் தன்னளவில் எவ்வித நுண்ணுயிர்களும் பல்கிப் பெருக விடாது என்றாலும் நாம் நமது கையினால் தொடும் பல பரப்புகள் (*surface*) எ.கா. கைப்பிடிகள், மேசை போன்றவை பல விதமான நுண்ணுயிரிகளால் நிறைந்தது. எனவே, மிக சுத்தமாக நமது கைகளை கழுவிக்கொள்வதும், மாதவிடாய் கப்களை பயன்படுத்தியப்பின், அதில் உள்ள உதிரத்தைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்தியப்பிறகு, அதனை சுத்தப்படுத்தி பயன்படுத்துதலும் மாதவிடாய் நாட்களுக்குப் பின்னர் அதனை உற்பத்தியாளர் சொல்லியிருப்பது போன்று, பாதுகாப்பாய் வைத்திருத்தலும் மிக முக்கியம்.

அதோடு முக்கியமான விஷயம், உதிரப்போக்கு ஏற்படும் போது அது மாதவிடாய் கப்பினில் வந்து சேர்ந்துவிடும், அந்த உதிரம் 12 மணிநேரத்திற்கு மேலாக கப்பினில் தங்கவிடுவது நல்லதல்ல. காரணம், அதுவே ஈஸ்ட் (*yeast*) தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்பாய் அமைந்துவிடும். எனவே உதிரப்போக்கு குறைவாய் இருந்தாலும் அவ்வப்போது சுத்தம் செய்து உபயோகிப்பது நல்லது. கடும் உதிரப்போக்கு





**தக்க ஆராய்ந்து, மாதவிடாய்**
கப்பினை தொடர்ந்து
**உபயோகப்படுத்துபவர்களின்**
அனுபவத்தினை கேட்டு அறிந்து
**பின் ஒரு முடிவினை எடுப்பது**
சாலச் சிறந்தது.

*இருக்கும் போது ஒரு நாளைக்கு 4 முதல் 5 முறையும் குறைவாக இருக்கும் பொழுது 2 முதல் 3 முறையும்.*

உதிரம் 12 மணிநேரத்துக்கும் மேல் சுத்தப்படுத்தப்படாமல் உடம்பில் இருந்தால், அந்த உதிரமே தொற்று உண்டாக்கும் நுண்ணுயிர்களை பல்கிப் பெருகச் செய்யும் உணவாய் அமைந்துவிடும். இது, *Staphylococcus aureus* என்ற கொடிய தொற்று பிறப்புறுப்பினில் ஏற்பட வாய்ப்பை ஏற்படுத்தும், அதோடு யோனியில் இருக்கும் அமிலத்தன்மை கொண்ட சூழலை (*acidic microenvironment in vagina*) அது சமநிலை இழக்கச் செய்து, நுண்ணுயிர்கள் தங்காதபடிக்கு இருக்கும் சூழலை பாழ் செய்து புதிய நோய்த் தொற்று ஏற்பட வழிவகுக்கும் என்றும் சொல்லப்படுகின்றது.

ஆக, மாதவிடாய் கப்பினைப் பயன்படுத்த நினைப்பவர்கள், நீங்கள் உங்கள் உடலினுள் ஒரு பொருளினை வைக்கப்போகிறீர்கள் என்ற புரிதலோடு இதனை அணுகுதல் வேண்டும். தக்க ஆராய்ந்து, மாதவிடாய் கப்பினை தொடர்ந்து உபயோகப்படுத்துபவர்களின் அனுபவத்தினைக் கேட்டு அறிந்து பின் ஒரு முடிவினை எடுப்பது சாலச் சிறந்தது. அதோடு, உங்கள் மருத்துவரிடம் இது குறித்த சந்தேகங்களைத் தெளிவுபடுத்தி, முறையாய் எப்படி இக் கப்புகளை அணியவேண்டும் என்பதனையும், மறு உபயோகம் செய்யும் முன் எவ்வாறு அதனை சுத்தம் செய்வது, எந்த solution கொண்டு சுத்தம் செய்வது போன்ற கேள்விகளுக்கு பதிலினைத் தெளிவுபடுத்திக்கொண்டு, தொற்று ஏற்பட்டால் என்ன செய்வது என்று ஆலோசனைப் பெற்றுக்கொண்டு, உபயோகப்படுத்திய பிறகு எச்சூழலில் இதனைப் பத்திரப்படுத்துவது என்பதனை அறிந்து, மாதவிடாய் கப்பினை அணிய முற்படலாம். பேடுகள் அணிவதால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுகின்றதே என்று குற்ற உணர்வு கொள்வோர் கவனத்திற்கு: பேடுகளை முறையாக அதற்குரிய குப்பைத்தொட்டியில் சேர்ப்பித்து, பேடுகளை எரித்து சாம்பலாக்கும் இயந்திரம் இருக்குமானால் (*Incinerators*) அதனில் சேர்ப்பித்து, முறைத்தவறி கழிவறையில் பேடினை அப்புறப்படுத்தாமல் இருந்தாலே முக்கால் வாசி பிரச்சனை என்பது இது குறித்து ஆய்வு செய்பவர்களின் கருத்து. அதனையும் மீறி, சூழல் மேல் அக்கறைக் கொண்டு மாதவிடாய் கப்பினைப் பயன்படுத்தலாமே என்று எண்ணினால், உங்கள் ஆரோக்கியத்தின் மீது சிரத்தை எடுத்து மேற்சொன்னவற்றை மனதில் கொண்டு, சந்தேகங்களைத் தெளிவுப் படுத்திக்கொண்டு முறையாக பயன்படுத்தவும். ஆக முக்கியமான விஷயம் ஒன்றே ஒன்று தான், தரமான மாதவிடாய் கப்பினைத் தேர்ந்தெடுத்தல் மிக மிக முக்கியம். ●

# கொலை செய்யுங்கள்...!



பிடிக்காதவன் கூட வசதியான சவமாய் வாழ்வதைவிட
பிடித்தவனுடன் ஏழை சம்சாரமாய் வாழவே
வாசல் தாண்டினேன் நான்

நீங்கள் இல்லாமல் நடக்கின்றதே என்ற ஏக்கத்துடனும்
எங்கே வந்துவிடுவீர்களோ என்ற பயத்துடனுமே
நடந்தேறியது எனக்கான திருமணம்

எத்தனையோ கனவுகள் நிறைந்த இந்த வாழ்க்கை
இல்லறம் ஆரம்பிக்கும் முன்பே
இருள் அடிக்கப்பட்டது உங்களால்

அடங்காத உங்கள் சாதி வெறியின் தேடல்
அரசாங்க மருத்துவமனை சவ அறையில்
என்னவனைப் பிணமாய் பார்த்தப் பின்பே முடிந்தது

ஆத்திரத்தின் காரணம் என் மீதான அன்பென்றால்
உங்கள் வீட்டு செல்ல பெண்ணை
கைம்பெண்ணாகக் காணத் துணிந்திருக்காதே மனம்

எங்கள் மீதான அன்பை வெளிக்காட்ட
ஆணவக் கொலை செய்ய வேண்டாம் - உங்கள்
ஆணவத்தைக் கொலை செய்யுங்கள்.

– கவிஞர் முகமது அலி



▪ மே 12 – உலக தாதியர் தினம் ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் (செஞ்சிலுவைச் சங்கம் அமையக் காரணமானவர்) பிறந்த தினம் (1820)

டி.எஸ்.எஸ்.மணி

# பெண் என்றால் மானுடம்



நாடெங்கும் காஷ்மீரில் நடந்த கொடுமை பற்றிய ஒரே பேச்சு. எட்டு வயதுச் சிறுமியைப் பாலியல் பலாத்காரம் செய்த கொடியவர்கள், எத்தனை கொடிய மனது கொண்டவர்கள்? நாடோடி பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த சிறுமி என்பது தெரியவந்துள்ளதாம். அதுவும், பெரும்பான்மை மக்களால் நம்பப்படும் "கோவிலுக்குள் எத்தனை நாள் வைத்து" இந்தக் கொடுமை நடத்தப்பட்டுள்ளது. மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்த சம்பவம். சிறுமியைக் காணவில்லையே என்பதாகத்தான் அப்போது, புலம்பலும், போராட்டங்களும், இருந்தன. எல்லா இடங்களிலும் தேடிய மக்கள், கோவிலுக்கு உள்ளே சென்று தேடுவது பற்றி சிந்திக்கவேயில்லை. எத்தனை கொடுமை பாருங்கள். கூட்டு பாலியல் வன்புறைச்சி நடத்தப்பட்டுள்ளது. சாகும்வரை சிறுமியை, பலாத்காரத்திற்கு உட்படுத்தி இருக்கிறார்கள். காவல்துறை அதிகாரிகளும், உதவி இருக்கிறார்கள். செய்தியை மறைத்து இருக்கிறார்கள். போராடிய மக்களை அடித்து துரத்தியிருக்கிறார்கள். அதே அதிகாரிகள் உட்பட இப்போது, எட்டு பேர் கைதாகியிருக்கிறார்கள். நீதிமன்றத்தின் தலையீட்டிலேயே இது வெளி வந்திருக்கிறது.


காஷ்மீரிலிருந்து செய்தி வந்ததாக ஒரு தோழி கூறினார். இதுபோன்று சிறுமிகளை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவது பொதுவாகவே அங்கே நடக்குமாம். ஆனால் வழமையாக ராணுவம் தான் அதைச் செய்யுமாம். இப்போது, சாதாரண கொடியவர்களே இதைச் செய்திருக்கிறார்கள். காவல்துறை ஒத்துழைப்புக் கொடுத்துள்ளது. கதுஹா மாவட்டத்தில் நடந்த கொடுமை இது. மாவட்ட, மாநில, உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் கேள்விக்கு உள்ளாகிறார்கள். வழக்கறிஞர்கள், குற்றவாளிகளுக்கு ஆதரவாக, பாதிக்கப்பட்ட, கொலை செய்யப்பட்ட சிறுமிக்கு ஆதரவாக வழக்காட வந்த பெண் வழக்கறிஞரை மிரட்டியிருக்கிறார்கள். இதை வைத்து, உச்சநீதிமன்றம், "அகில இந்திய பார் கவுன்சில், மாநில பார் கவுன்சில் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம், கதுஹா மாவட்ட வழக்கறிஞர் சங்கம்" ஆகியவற்றிடம் விளக்கம் கேட்டுள்ளது. சிறுமி மீது வன்கொடுமை செய்தவர்கள் மட்டுமின்றி, அவர்களுக்கு ஆதரவாக, காவல்துறையும், வழக்கறிஞர்களும் செயல்பட்டால், இது இந்த சமூகத்தின், "பெண்களுக்கு எதிரான" ஆணாதிக்க வெறி பிடித்த சிந்தனைப் போக்கின்றி வேறு என்ன ?

அடுத்து இதேபோல, உத்தரப் பிரதேசத்தில், உண்ணாவ பகுதியில், உள்ளூர் எம்.எல்.ஏ. ஒரு பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்துவிட்டு, அதற்காக அந்தப் பெண்ணும், அவரது தந்தையும் முதல்வர் முன்னால் போராடினால், காவல்துறை மூலம் தந்தையை அடித்து, கைது செய்து, அவர் இறந்துவிட்ட நிலை உருவாக்கி உள்ளது. காவி உடை தரித்த ஆளும்கட்சி எம்.எல்.ஏ. தொடர் போராட்டங்களுக்குப் பிறகு, நீதிமன்றத் தலையீட்டிற்குப் பிறகு, கைது செய்யப்படுகிறார். இவை எல்லாம் எதைக் காட்டுகிறது?. வெறி பிடித்து ஆணாதிக்க உலகம் ஆடுகிறது என்று காட்டவில்லையா? இதற்கு இனி அமைதி வழியில், சட்ட வழியில் மட்டுமே தீர்வு காண முடியுமா? பெரும் அளவு மக்கள் போர் நடத்தப்பட்டு ஆகவேண்டும் என்ற உண்மையை அல்லவா இந்த நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன?.

ஏப்ரல் 15ஐ தமிழ்நாட்டு திருநங்கைகள் தங்கள் தினமாகக் கொண்டாடுகின்றனர். அதற்காக, "சண்டைக்காரி" என்று ஒரு நாடகத்தை அரங்கேற்றினார்கள். அதில், "பொறியியல் கல்லூரிக்கு சட்டப் போராட்டம் மூலம் வென்று பொறியியலாளராக, வந்துள்ள கிரேசி பானு, போராடி மட்டுமே பிசியோ தெரபிஸ்ட்டாக அரசு பணி கிடைத்த செல்வி, போராடி காவல்துறை அதிகாரியான திருநங்கை, சட்டப் போராட்டம் மூலமே சித்தா மருத்துவக் கல்லூரிக்குள் நுழைந்துள்ள தாரிகா போல பல திருநங்கைகளின் வாழக்கை வெற்றிகளை தொகுத்து வழங்கினார்கள். அதுவே, அவர்களது முன்னேற்றத்திற்கு, "நம்பிக்கை" ஊட்டுவதாக அமைந்தது. சாராம்சத்தில், திருநங்கைகளின் இந்த வெற்றிகளும், "ஆணாதிக்கத்தை எதிர்த்த வெற்றிகள்தான்". ஒருபுறம் வெற்றிச் செய்திகளும், மறுபுறம் வன்முறைச் செய்திகளும் கொண்டதாக நம் வாழும் பூமி உள்ளது வேதனைதானே?

– தொடரும்





# கைத்தடி விருதுகள் 2018

**கைத்தடி இரண்டாம் ஆண்டு துவக்க விழா** மற்றும்
**மதி பப்ளிகேசன் புத்தக வெளியீட்டு விழா காட்சிகள்**













▪ மே 13 (1952) – இந்திய நாடாளுமன்றத்தில் முதல் மக்களவைக் கூட்டம் துவங்கியது.



# பேஸ்புக்கா? ஸ்கூல் புக்கா?

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு கல்வி கற்க வேண்டுமானால், பல்வேறு வேலைகளை, அந்த கல்வி கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் (குரு)க்கு செய்து கொடுத்து கல்வியைக் கற்க வேண்டிய கால கட்டம் இருந்ததை நாம் அறிவோம்..!

இருந்த போதிலும் அனைவரும் கல்வியைக் கற்க முடியுமா.? என்றால் நிச்சயம் இல்லை. ஏனெனில், அவர்கள் அங்கு சாதி பார்த்து, மதம் பார்த்தல்லவா கல்வியைக் கற்றுத் தந்தார்கள்.

சாதியில் உயர்ந்தவன் மேசையில் அமர்ந்து படிக்க வேண்டும், சாதியால் தாழ்த்தப்பட்டவன் கோணிப்பையில் அமர்ந்து படிக்க வேண்டும் என்றெல்லாம் சொன்ன காலங்களை நாம் மறக்கவா முடியும்..? அதுமட்டுமா.? சாதிக்கு ஏற்ற உடையுமல்லவா இருந்தது. ஆனால், அந்த பல கொடுமைகளையும் தாண்டி, அந்த கல்வி முறையிலே படித்துப் பட்டம் பெற்று வந்த சட்டமேதை அண்ணல் அம்பேத்கரையும், கல்வி வள்ளல் காமராசரையும் நாம் மறக்கவா முடியும்..?

மேல்சாதிக்கு ஒரு கல்வி, கீழ் சாதிக்கு ஒரு கல்வி அல்லாமல் அனைவருக்கும் கல்வி, அதுவும் சமச்சீர் கல்வி என்றெல்லாம் கல்வி முறையிலே பல்வேறு வகையான மாற்றத்தை, சீர் திருத்தத்தைக் கொண்டு வந்து வருங்காலத் தலைமுறையினர் நல்லதொரு கல்வியுடன் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்று போராடிய தலைவர்களை நாம் அறிந்திருக்கிறோம்.

அவ்வாறு அவர்கள் இன்னல் பட்டு, துன்பப்பட்டு வாங்கித் தந்த கல்வியை, இன்று நாம் புத்தகத்தின் மூலம் படித்து வருகிறோம். புத்தகங்களை நாம் சரியாகப் படிக்கிறோமா.? என்றால், ஆம்.! என்று சில பதில்களையும், இல்லை என்று சில பதில்களையும் நாம் அறிவோம்.

இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் பேஸ்புக் மோகம் அதிகமாக உள்ளது என்பது தெரிந்த ஒன்றுதான். இந்த மோகம் நாளடைவில் அவர்களை அதற்கு அடிமையாக மாற்றுகிறது. பள்ளிக்கு (ஸ்கூல்) செல்லும் மாணவர்கள் பாடப்புத்தகத்தை எடுக்கிறார்களோ.! இல்லையோ.! நிச்சயம் அவர்கள் பேஸ்புக்கில் இருக்கிறார்கள் என்பது நிதர்சனமான உண்மை. அப்படிப் பார்க்கும் போது, பேஸ்புக்கா.? ஸ்கூல் புக்கா.? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் நிச்சயம் எழுகிறது. அவ்வாறு கேள்விகள் தோன்றக் காரணம் நான் முன்பே கூறியது போலவே பேஸ்புக்கின் மீது கொண்ட மோகம் தான்.

பேஸ்புக்கையும் வாட்ஸ்அப்பையும் மாணவர்கள், இளைஞர்கள், மட்டும் தான் பயன்படுத்துகிறார்களா? என்று கேட்டால் அதற்கு இல்லை என்பதே பதிலாகும்.

ஏனெனில்,

“இருபதில் இருந்து அறுபது வரைக்கும்

எல்லோர் கையிலும் செல்போன்”

அறிவியல் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு இவைகளே முன் உதாரணமாக நமக்கு அமையும். ஒரு மாணவன் என்ன தான் அவன் பாடப்புத்தகத்தைப் படித்தாலும் 100 சதவீதம் புரிந்து படிக்க முடியுமா.? என்று கேட்டால் இல்லை என்பது பதில். காரணம், ஒவ்வொரு மாணவனின் எண்ணங்களும்

மு.சி.அறிவழகன்

# வாழ்க்கையை மாற்றும் ஸ்கூல் புக்!



வாலிபத்தை
ஏமாற்றுவது
பேஸ்புக்.
வாழ்க்கையை
மாற்றுவது
ஸ்கூல் புக்.

இப்போதைக்கு (இப்பொழுது)
உன்னோட
ஃபேஷன் ஆகும்
ஸ்கூல் புக்தான்
இந்த உலகத்தில்
உன்னை
ஃபேமஸ் ஆக்கும்.



ஒவ்வொரு கோணங்களில் இருக்கும் என்பது மனரீதியான உண்மை.

ஒரு மாணவனுக்குப் பாடல் கேட்டுப் படிக்கப் பிடிக்கும், ஒரு மாணவனுக்கு எழுதிப் படிக்கப் பிடிக்கும், நடந்து படிக்கப் பிடிக்கும், படம் பார்த்து படிக்கப் பிடிக்கும்... இப்போதெல்லாம் மாணவர்களுக்கு அந்தப் பாடத்தையே படமாக அல்லவா பார்க்கப் பிடிக்கிறது. மாணவர்கள் பாடத்தை படமாகப் பார்க்கும் போது அவர்களுக்கு எளிமையாகப் புரிந்து பதிந்து விடுகிறது.

அதுபோலவே இன்று முகநூலில் வெறும் பொழுதுபோக்கு அல்லாமல் அதிலும் பல்வேறு வகையான செயல்பாடுகள் உள்ளது.

(1) கல்வி

(2) விளையாட்டு

(3) பொழுதுபோக்கு

என செயலியில் (App) பல்வேறு வகையான சிறப்புகளைப் பொருந்தியதாக பேஸ்புக்கானது விளங்குகிறது. அதுமட்டுமல்லாமல் மாணவர்களை மட்டுமல்லாமல் அனைவரையும் கவர்ந்து இழுக்கும் வகையில் இருப்பதால் அதனுடைய பயன்பாட்டாளர்கள் அதிகரித்த வண்ணம் உள்ளனர்.

இன்னும் சிறப்பு என்னவென்றால் P.hd முடித்தவர்கள் தான் பேஸ்புக்கை பயன்படுத்த முடியும் என்றில்லாமல் யார்வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்ற வகையில் அமைந்திருப்பதால் தான் அனைவரும் பேஸ்புக்கையும் வாட்ஸ்அப்பையும் அதிக அளவில் பயன்படுத்தி வருகிறார்கள். இதனுடைய பயன்பாட்டில் பல்வேறு வகையான நன்மைகள் இருக்கிறது. அவற்றை நாம் தீய வழியில் பயன்படுத்தினால் தீமை தரக்கூடியதாகவே அமையும்.

முகநூலில் இருக்கும் நபர் நமக்கு என்ன சாதி, என்ன மதம் என்பவையெல்லாம் தெரியாது. நாம் நம்முடைய உரிமையை, எண்ணத்தைப் பதிவிடும் ஓர் இடமாக முகநூல் அமைந்து வருகிறது. நாம் பாடப்புத்தகத்தில் படித்திருப்போம்... ஓர் ஊரினுடைய பிரச்சனைகள், முடிவுகளையெல்லாம் ஒரு ஊரின் ஆல மரத்தினடியில் ஒன்று சேர்ந்து அமர்ந்து பேசி முடிவெடுப்பார்கள் என்று படித்திருக்கிறோம்.

ஆனால்..,

இன்றோ..! ஒரு தாய் தந்தை கூட தன்னுடைய பிள்ளையை சந்தித்துப் பேச முடியாத அளவில் அவர்களுடைய கால அட்டவணையைத் தீட்டி செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் இடமாக முகநூல் பயன்பட்டு வருகின்றது. நாட்டில் நடக்கும் செயல்களை உடனுக்குடன் தெரிந்துகொள்ளவும் இந்த முகநூல் பயன்பட்டு வருகிறது.

இன்றைய இளைய தலைமுறை மாணவர்கள் நாளை நம்முடைய நாட்டை முன்னேற்றுவதற்காக இந்த வலைத்தளங்களைப் பயன்படுத்துவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அதுமட்டுமல்லாமல் அரசியல், பொருளாதாரம், அறிவியல், சோதிடம் என அனைத்தையும் இன்றைய சமுதாயம் முகநூலில் பயன்படுத்தி வருகிறது. இந்த நிலைமாறி நல்லதொரு பகுத்தறிவுச் சிந்தனைகள், அறிவியல் வளர்ச்சி, செயல்பாடுகள் போன்ற தகவலை மாணவர்கள் மத்தியில் கொண்டு சென்று அவர்களினுடைய பொது அறிவை, இந்தப் பொழுதுபோக்குச் செயலியின் (App) மூலம் பயனுள்ள செயல்பாடாக மாற்றியிருந்தால் நாளைய தலைமுறை பற்றிய கவலை இல்லாமல் போயிருக்கும்.

பேஸ்புக்கா.? ஸ்கூல் புக்கா.? என்ற கேள்வி தோன்றும் போது.. நாம் இந்தப் பார்வையில் பார்த்தால் அதற்கான பதில் கிடைக்கும் என்று சொல்லலாம். நம்முடைய கடந்த கால வரலாற்றைக், கடந்த கால அறிவியல் கண்டுபிடிப்புகளைக், கோட்பாடுகளைக், கணித வரையறைகளைக், கணிதப் புதிர்களைத், தமிழ், ஆங்கிலம் இலக்கண இலக்கியங்களைத் தெரிந்து தெளிவு பெற ஸ்கூல் புக்கையும் இன்றைய நிகழ்வுகளை உண்மையுடன் உடனுக்குடன் தெரிந்து கொள்ள பேஸ்புக்கையும் பயன்படுத்தினால் சிறப்பு என்று சொல்லலாம்.

*“அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும்”*

என்ற பழமொழி நினைவுடன் செயல்படுவோம். ●

# அஞ்சாங்கல்



தற்பொழுதெல்லாம் தமிழகத்தின் நகரம் மற்றும் மாநகரங்களில் பள்ளியில் முழு ஆண்டுத் தேர்வு முடிந்ததும் பிள்ளைகளைப் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக அனுப்புவதை காணமுடிகிறது. குறிப்பாக நீச்சல் பயிற்சி, ஓவியப் பயிற்சி, கைவினைப் பொருட்கள் செய்ய பயிற்சி, ஸ்கேட்டிங் பயிற்சி, டேபிள் டென்னிஸ், மட்டைப்பந்து பயிற்சி, இறகுப்பந்து விளையாட்டு என்று பல ஆயிரங்களில் சில இடங்களில் இலட்சங்களில் கட்டணம் கட்டி பயிற்சி வகுப்புகளில் சேர்ப்பதைப் பார்க்கலாம். அதுவும் அடுத்த ஆண்டில் பொதுத் தேர்வு எழுதும் பத்தாம் வகுப்பு அல்லது +1 அல்லது +2 மாணவர்கள் என்றால் அதுவும் இல்லை. ஆனால் கிராமங்களில் அதற்கான வசதியும் வாய்ப்பும் இல்லாததால் அங்குள்ள குழந்தைகளும் சிறுவர்களும் சில கிராமத்து விளையாட்டில் கவனம் செலுத்தி தங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்வதோடு கூர்மைபடுத்திக்கொள்கின்றனர்.

மனிதன் தன் குழந்தைப் பருவத்தில் இருந்தே தனது திறனை ஏதேனும் ஒரு வழியில் வெளிப்படுத்திக்கொண்டே இருக்கும் இயல்பைப் பெற்றிருக்கிறான். குழந்தைகள் கை கால்களை அசைப்பதாக இருக்கட்டும் கவிழ்ந்து படுத்துக்கொள்வதாக இருக்கட்டும், தரையில் நகருவதாக இருக்கட்டும், சற்று வளர்ந்த பின்பு ஓடுவது, திண்ணையிலிருந்து குதிப்பது, தாண்டுவது, கதவின் மீது ஏறி கதவுச் சட்டத்தில் நின்றுகொண்டு வண்டி ஓட்டுவது என்று ஏதோவொரு வகையில் தனது திறனை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறார்கள் குழந்தைகளும் சிறார்களும். ஆனால் குழந்தைகள் வளர்ந்து, பள்ளிக்கூடம் அவர்கள் வாழ்வில் ஒரு அங்கமாக மாறும்போது, அவர்கள் இயற்கையிலேயே விளையாட்டாகப் பெறக்கூடிய திறமைகளுக்கான வழிகளை எல்லாம் அடைத்து விட்டு, மூளையை மட்டும் வலுப்படுத்தும் வழியை மட்டும் திறந்து விடுகிறோம். மனித இனத்தின் வளர்ச்சி என்பது வெறும் அறிவு வளர்ச்சியோ அல்லது வெறும் உடல் மற்றும் மன வளர்ச்சியோடு நின்றுவிடுவதில்லை. எல்லாவற்றின் ஓட்டுமொத்த வளர்ச்சிதான் உண்மையான வளர்ச்சியைக்குறிக்கிறது. தமிழர்களின் கிராமப்புற விளையாட்டுகளில் ஒன்றான அஞ்சாங்கல் என்ற விளையாட்டு எப்படி உடல் வளர்ச்சிக்கும், மனவளர்ச்சிக்கும், திறமைகளின் வளர்ச்சிக்கும் பயன்படுகிறது என்று பார்ப்போம்.

பொதுவாகவே விளையாட்டு என்பது ஒரு செயல், அதில் மன நிறைவு என்பது ஒரு பகுதியே என்றாலும் அது திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் வெளிப்படுத்தவும் ஓர் களமாகத் திகழ்கிறது என்று பெருமாள் என்னும் ஆய்வாளர் குறிப்பிடுகிறார். பெரும்பாலான விளையாட்டுகள் பொழுதுபோக்குக்காக விளையாடினாலும் அவை மன மகிழ்ச்சியைத் தருவதோடு திறமைகளையும் வளர்த்து விடுகிறது, மேலும் விளையாட்டுதான் குழந்தைகளுக்கு சமூக வாழ்வை சொல்லிக்கொடுக்கிறது. விளையாடுவதன் மூலம் குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் உறவுகளை வளர்த்துக்கொள்ளவும் ஒத்து செயல்படவும் தேவையான மானுடத் திறமைகளை கற்றுக்கொள்கிறார்கள் என்று அதன் பின் வந்த ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

பொதுவாக அஞ்சாங்கல் விளையாட்டை சிறுமிகள் தான் விளையாடுவார்கள், சிறுவர்களும் விளையாடலாம். அஞ்சாங்கல் விளையாட்டு விளையாடுவது மிகவும் சுலபம். இந்த அஞ்சாங்கல் விளையாட்டில் சிறுமிகள் கற்களை கீழே வீசி விட்டு வீசிய கற்களில் ஒன்றை எடுத்து மேலே தூக்கிப் போட்டுவிட்டு அந்த கல் கீழே விழுவதற்குள் கீழேயுள்ள கற்களை கையால் எடுத்துக்கொண்டு மேலே தூக்கிப் போட்ட கல்லையும் கீழே விழாமல் பிடிக்கவேண்டும். இவ்வாறு கீழே உள்ள கல்லை எடுப்பதிலும் மேலே தூக்கிப் போட்ட கல்லை பிடிப்பதிலும்தான் விளையாடும் சிறுமியின் வெற்றி இருக்கிறது. கையும் கண்ணும் மூளையும் ஒருங்கே இணைந்து விரைவாகச் செயல்பட்டால்தான் கல்லை எடுப்பதும் பிடிப்பதும் சாத்தியமாகும்.

இந்த விளையாட்டை எப்படி விளையாடுவது என்று காண்போம். இந்தவிளையாட்டு விளையாட ஐந்து அல்லது ஏழு கற்களைப் பயன்படுத்துவார்கள். குறைந்தது இரண்டு சிறுமிகளும் சில நேரங்களில் இரண்டுக்கும் மேற்பட்ட சிறுமிகளும் சேர்ந்து இந்த விளையாட்டை விளையாடுவதுண்டு. இந்த விளையாட்டைப் பல சுற்றுகளாக விளையாட வேண்டும் அதில் அனைத்திலும் யார் வெற்றிபெறுகிறார்களோ அவர்களே வென்றவர்கள் ஆவர்.

ஆட்டத்தின் முதல் சுற்றில் அஞ்சு கல்லையும் கையில் எடுத்து ஒன்னுகொன்னு முட்டாம தரையில வீசணும். அதுல ஒரு கல்லை கையில் எடுத்துக்கணும், அதுக்கு கை கல்லுன்னு பேரு. கை கல்லை எடுத்து மேல நேரா தூக்கிப்போட்டுட்டு, கீழ இருக்கற ஏதொவொருக் கல்லை எடுத்துக்கிட்டு மேல தூக்கிப்போட்ட கல்லையும் அதே கையால புடிக்கணும். இப்படியே "ஒவ்வொரு கல்லாக மற்ற கல்லையெல்லாம் எடுத்து முடிச்சாத்தான் முதல் சுற்று ஆட்டம் முடிஞ்சதுனு அர்த்தம். இதுல எப்பவாவது மேலே தூக்கிப் போட்ட கல்லை புடிக்காம வுட்டாலோ, கீழ இருக்கிற கல்லை எடுக்காம விட்டாலோ, அல்லது ஒரு கல்லை எடுக்கும் போது மத்த கல்லில் கை பட்டுவிட்டாலோ ஆட்டம் ஆடுபவர் ஆட்டம் இழப்பர், ஆட்டம் அடுத்தாளுக்கு போயிடும். அடுத்தாளும் இதே மாதிரி அஞ்சாங்கல்லை தரையில போட்டுட்டு கல்லை ஒவ்வொன்னா எடுக்க வேண்டும். அப்படி கல்லை எடுக்கலனா மீண்டும் ஆட்டம் உங்களுக்கே அதாவது முதல் நபருக்கே வரும். முதல் நபர் மறுபடியும் விட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்கனும். இது முடிந்ததும் இரண்டாம் சுற்றுக்குப் போகணும்.

இரண்டாம் சுற்றில் மறுபடியும் அஞ்சு கல்லயும் கையில

தமிழர் விளையாட்டுகள்

கு.முருகேசன்

எடுத்து தரையில வீசணும். இப்ப ஒரு கல்லை கையில எடுத்துகிட்டு அதை மேலே தூக்கிப்போட்டுட்டு இரண்டு இரண்டு கல்லாக தரையில் இருந்து எடுத்துகிட்டு அதே கையால மேல தூக்கிப் போட்ட கல்லையும் பிடிக்கணும். அதற்குத் தகுந்தாற்போல கல்லை தரையில வீசும்போதே பக்குவமாக வீசணும். இப்ப நாலு கல்லையும், இரண்டு சோடியா எடுக்கணும். முதல் சுற்று மாதிரியே இப்பவும் மேலே தூக்கிப் போட்ட கல்லை புடிக்காம வுட்டாலோ, கீழ இருக்கிற கல்லை இரண்டு இரண்டாக எடுக்காம விட்டாலோ, அல்லது கல்லை எடுக்கும் போது மத்த கல்லில் கை பட்டுவிட்டாலோ ஆட்டம் ஆடுபவர் ஆட்டம் இழப்பர், ஆட்டம் அடுத்தாளுக்கு போயிடும். அடுத்தாளும் அவர் விட்ட சுற்றில் இருந்து ஆட்டத்தை தொடங்குவார். இந்த சுற்று முடிந்ததும் அடுத்த சுற்றுக்குப் போகணும்.

மூன்றாவது சுற்றில் அஞ்சுகல்லையும் தரையில எடுத்து வீசும்போது மூணு கல்லு ஒண்ணா இருக்கிற மாதிரி வீசினா நல்லது, ஏன்னா இந்த முறை மூணு கல்லை ஒட்டுமொத்தமா எடுத்துட்டு, ஒரு கல்லை தனியா எடுக்கணும். ஒரு கல்லை மொதல்ல எடுத்துட்டு பிறகு மூணு கல்லையும் கூட எடுக்கலாம்.

நான்காவது சுற்றில் இந்தாட்டம் கொஞ்சம் வேற மாதிரி விளையாடனும். அதாவது அஞ்சு கல்லையும் கயில வெச்சுட்டு அதுல ஒரு கல்லை மட்டும் மேல தூக்கிப் போடணும். அந்தக் கல்லு மேல போயிட்டு வரதுக்குள்ளார கையில இருகிற மீதி நாலு கல்லயும் கீழ மொத்தமா வைச்சிட்டு மேல தூக்கிப்போட்ட கல்லைப் புடிக்கணும். அப்புறம் மொத மூணுசுற்று மாதிரியே அந்தக் கல்லை மேலே தூக்கிப்போட்டுட்டு கீழ இருக்கற நாலு கல்லையும் ஒட்டுமொத்தமா எடுக்கணும்.

அடுத்த ஐந்தாவது சுற்று கொஞ்சம் பெரிய சுற்று, இதுல முதல்ல நாலாவது சுற்று மாதிரியே அஞ்சு கல்லயும் கையில வெச்சுட்டு அதுல ஒரு கல்லை மேல தூக்கிப்போட்டுட்டு, அதே கையில ஆட்காட்டி விரலால சுண்டி கீழ தரையைத் தொடணும். மீண்டும் ஒருமுறை இதேமாதிரி செய்யணும். அடுத்து நாலாவது சுற்று மாதிரியே அஞ்சு கல்லையும் கையில வச்சுகிட்டு அதுல ஒரு கல்லைமட்டும் மேலே தூக்கிப்போட்டுட்டு மீதி நாலு கல்லையும் கீழ தரையில மொத்தமா வைச்சிட்டு, மேல போட்ட கல்லைப் புடிக்கணும். இப்ப ஒரு கல்லு கையில இருக்கும் மீதி நாலு கல்லும் கீழ தரையில இருக்கும். இப்ப கையில இருக்கற ஒரு கல்லைத் தூக்கிப்போட்டுட்டு ரெண்டு கையாலயும் கீழ தரையைத் தட்டணும். அப்புறம் மேல போட்ட கல்லைப் புடிக்கணும். இப்ப கையில இருக்கற ஒரு கல்லை மேல தூக்கிப்போட்டுட்டு, கீழ இருக்கற கல்லையெல்லாம் எடுத்துகிட்டு மேலே தூக்கிப்போட்ட கல்லைப் புடிக்கனும். அடுத்து ஆட்டத்தோட முக்கியமான கட்டம். போன ஆட்டத்து முடிவில ஆடறவங்க உள்ளாங்கையில அஞ்சு கல்லும் இருக்கும். அந்த கல்லையெல்லாம் தூக்கிப்போட்டு பொறங்கையால (கையின் பின்பக்கமாக) புடிக்கணும். அப்படி புடிக்கும்போது எல்லாக் கல்லையும் புடிக்கணும்னு அவசியமில்லை, முடிஞ்சவரைக்கும் கொஞ்சமா புடிக்கிறது நல்லது. ஆனா அப்படி முயற்சிக்கும்போது எல்லாக் கல்லும் கிழே விழறதுக்கும் வாய்ப்பு இருக்கு. இந்த நேரத்திலதான் மிகவும் கவனமாக விளையாடனும். அப்படியே எதையும் புடிக்காம வுட்டுட்டாலும் உடனே 'மொட்டக்கையில மோர் ஊத்து' ன்னு சொன்ன எதிராளி மறுபடியும் எல்லா கல்லையும் ஆடுகிறவருக்கு கையில குடுக்கொணும். ஆனா அப்படி சொல்லறதுக்கு முன்னாடி எதிராளி 'தூ' அப்படின்னு சொல்லீட்டா ஆடுகிறவரின் ஆட்டம் காலி. இப்ப பொறங்கையில இருக்கற கல்லை அப்படியே வீசி புடிக்கணும். இதை சுங்கனும் அல்லது சுங்கிப்புடிக்கணும்-னு சொல்லுவாங்க. அதாவது உள்ளாங்கை கீழ தரையைப் பார்த்துத்தான் இருக்கும் அப்போது வீசின கல்லை சொக்கிப் புடிக்கனும் அல்லது சுங்கிப் புடிக்கணும். இதுல ரொம்ப முக்கியம் வீசுன எல்லாக் கல்லையும் புடிக்கனும். இதேமாதிரி மீண்டும் இரண்டுமுறை சுங்கிப் புடிக்கணும். அடுத்த படியாக அஞ்சு கல்லையும் எடுத்து வீசி பொறங்கையில புடிச்சு, எதிராளியை புடிச்ச கல்லுல ஏதேனும் ஒன்றை தொடச்சொல்லனும். எந்தக் கல்லைத் தொடறாங்களோ அந்தக் கல்லைச் சுங்கிப் புடிக்கணும். எதிராளி வெவரமா இருந்தா புடிக்க முடியாத ஒரு கல்லைத் தொடுவாங்க. நீங்க இன்னும் வெவரமா இருந்தா ஒரே ஒரு கல்லை மட்டும் கூட புடிக்கலாம். ஆனா அதை ஆட்டத்தோட தொடக்கத்திலேயே பேசி முடிவு பண்ணிக்கறது நல்லது. அப்புறம் முதல் சுற்று மாதிரியே, கையில இருக்கற கல்லை மேலே தூக்கிப்போட்டுட்டு கீழ தரையில் இருக்கற கல்லை ஒவ்வொண்ணா எடுக்கணும்.



இந்த ஆட்டம் வரைக்கும் யாரு மொதல்ல ஆடி முடிக்கறாங்களோ அவங்கதான் ஜெயிச்சவங்க.

இந்த அஞ்சாங்கல் ஆட்டத்தில் ஆடுபவர் கவனமாக கையையும் கண்ணையும் மனதையும் ஒருங்கிணைத்து ஆடினால்தான் வெல்லமுடியும் ஆகவே ஆடுபவர்க்கு இவற்றை ஒருங்கிணைக்கும் திறன் வளர்கிறது. மேலும் அஞ்சாங்கல் விளையாட்டில் சிறுமிகள் கற்களை மேலே விட்டுப் பிடிப்பதால் அவர்களின் கைவிரல்கள் மற்றும் கைகளின் மணிக்கட்டுக்கு நல்ல பயிற்சி கிடைக்கிறது. இந்த ஆட்டத்தை ஆடுபவர் தவறு செய்கிறாரா என்று எதிரில் இருப்பவர் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதால் அவரின் உற்றுநோக்கும் திறனும் கண்களின் இயக்கமும் பலப்படும்.

சின்ன வயதில் பள்ளி ஆசிரியர் ஒரு மாணவரைப் பார்த்து கேள்வி கேட்டார். அதாவது ஒரு பழைய பாலத்தில் உங்களால் இரண்டு எலுமிச்சம் பழத்தை மட்டும்தான் எடுத்துக் கொண்டு ஒரு பக்கத்தில் இருந்து அடுத்த பக்கத்திற்கு பத்திரமாக செல்லலாம், அதற்கும் மேல் எடுத்துச் சென்றால் அந்த பாலம் உடைந்து போகும். ஆனால் நீங்கள் ஒரே நேரத்தில் நான்கு பழத்தையும் பாலத்தின் அடுத்த பக்கத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும் அதை எப்படி எடுத்துச் செல்வீர்கள் என்று கேட்டார். அந்த மாணவனுக்கு அஞ்சாங்கல் ஆடத் தெரிந்திருந்ததால் இரண்டு பழத்தை மேலே தூக்கிப்போட்டு விட்டு அது கிழே வருவதற்குள் அடுத்த இரண்டு பழத்தை மேலே போட்டுவிட்டு முன்பு போட்ட பழம் கிழே வரும்போது அதை கையில் பிடித்துக்கொண்டு நகர்ந்து கொண்டே சென்றால் பாலத்தின் அடுத்த பக்கத்திற்கு நான்கு பழத்துடன் சென்றுவிடலாம் என்று செயல் முறை விளக்கத்தோடு பதில் தந்தானாம் மற்ற மாணவர்கள் எல்லாம் அந்த மாணவனின் அறிவுத்திறனை வியப்போடு பார்த்தார்களாம்.

எனவே பெற்றோர்களே உங்கள் குழந்தைகளுக்கும் அஞ்சாங்கல் விளையாட்டைச் சொல்லிக்கொடுங்கள். அவர்களும் வாழ்க்கையில் திறமையோடும் அறிவுக்கூர்மையோடும் வளர்வார்கள்.

**– இன்னும் விளையாடலாம்**



▪ மே 17 – உலக தொலை தொடர்பு தினம் – அக்னி-2 ஏவுகணை ஏவப்பட்டது.



13

இரு தரப்பையும் ஆளாளுக்கு சமாதானம் செய்தனர்.

“அமாவாசை வாப்பா போகலாம்” என அழைத்தனர் லெனினும் காமராசுவும்.

அமாவாசை சீறியபடியே நாக்கை மடித்து எச்சரித்தான். “டேய் தேவையில்லாம இனிமே என் பசங்க கிட்ட பிரச்சனை பன்னுன நடக்கறதே வேற ஜாக்ரதை” என்றபடி நகர்ந்தான்,

“ஏன்பா அமாவாசை அவனோட என்ன சண்டை. அவன் ஒரு மாதிரி ஆளு. வருசத்துல பாதி ஜெயில்லயே வாழ்க்கைய கழிக்கறவன். அவன் கூட என்ன பிரச்சனை வேண்டி கெடக்கு”

“அவனெல்லாம் சாதிவெறி புடிச்சவன்” என்றார் லெனின்.

“ஆமா சார் உண்மைதான். நானும் உள்ள வந்த நால்ல இருந்து பாத்துகிட்டேதான் இருக்கேன்”

“வரப்ப போறப்ப எல்லாம் சாதிய பத்தி ரொம்ப இழிவா பேசறது. துண்டெடுத்து கக்கத்துல வைச்சிட்டு இருந்த நாயெல்லாம் இப்ப கையில் கத்தி எடுக்குது பாருனு எகத்தாளமா பேசறான் சார். இன்னைக்கு மதியம் சாப்பாடு போடற எடத்துல வந்து பேசறான் சார். சக்கிலி பறையன் பொம்பளைங்க எல்லாம் நாங்க மொதல்ல ருசி பாத்தபொறவுதான் நாங்க கல்யாணம் பன்றானுகனு அசிங்கமா பேசறான் சார். நாங்க காலத்துக்கும் ஒழைச்சுதான் சார் சோறு திங்கறோம். எவன் குடியும் கெடுத்து பொழைச்சதில்ல உழைச்சு உரமேறுன ஒடம்பு சார். உழைச்சு உழைச்சு விசுவாசமா ஆண்டைகள பல காலமா காப்பாத்தி குடுத்துட்டுதான் நாங்க இன்னமும் ஏழைகளாவே இருக்கோம். இவனுக என்னமோ.... தாழ்த்தப்பட்ட சமூகத்துல பிறந்தது எங்க தப்பா சார்?...

இங்க ஜெயிலுக்குள்ளயும் வந்து எங்கள எளக்காரமாவே பாக்கறதும் பேசறதும் எத்தனை நாளைக்கு சார் பொறுத்து போறது. அதான் இன்னைக்கு ஆத்திரம் தாங்க முடியல கைய நீட்டிப்புட்டேன்”

“சரி விடு அமாவாசை. கோவப்பட்டு இங்க என்ன ஆகவேண்டியது இருக்கு. அவன்அவனுடைய புத்தி அப்படி. இந்த ஜெயில்ல எனக்கும் சொந்த வீடு மாதிரிதான். நானும் அடிக்கடி ஆர்ப்பாட்டம் போராட்டம் வன்முறை வழக்குனு பதினைஞ்சு வருசமா இங்க வந்து போய்கிட்டே இருக்கறதால சொல்றேன்.

# எச்சில் தொட்டி

ஜெயில்கள் எல்லாமே இப்ப சிறைத்துறை கட்டுப்பாட்டுல இல்லை முழுக்க முழுக்க காவி கும்பல்களுடைய கட்டுப்பாட்டுல வந்துருச்சு. அடுத்தபடியா சாதி வெறி புடிச்ச ஆதிக்க சாதி கட்டுப்பாட்டுக்குள்ளயும் வந்துடுச்சு அப்படிங்கறது தான் உண்மை. உள்ள வர்றவன் என்ன குற்றம் பண்ணிட்டு வரான்ங்கறது முக்கியமில்ல. போகும்போது அவன் ஒரு சாதி வெறியனாவும் மத வெறியனாகவும்தான் போறான்.

சின்ன சின்ன கேசுல வர்ற சின்ன பசங்கள எல்லாத்தையும் பாருங்க மணிக்கட்டு கட்டைவிரல் பக்கத்துல ஓம் னு வடமொழி எழுத்து பச்சை குத்தியிருக்கும். இவனுக வெளியிலயா குத்திட்டு வரானுக இல்லவே இல்லை சங்க பரிவார கும்பல் *RSS BJP* கும்பல்கள் எல்லாம் சிறைக்குள்ள வேணும்னே எதாச்சும் குற்றச்செயல்கள் செஞ்சிட்டு இங்க வந்து வர்ற சின்ன பசங்கள அரசியல் அனுபவம் ஏதும் இல்லாத காரணத்தை வச்சு இந்துங்கறதும் இந்தியன்ங்கறதுமா தத்துவங்கள் ஏதுமில்லாத வரட்டு இந்து தத்துவ காட்டுமிராண்டிகளா மொதல்ல மாத்திருவானுக.

பிறகு இவனுக வெளியில போனப்பிறகு அந்த ரவுடி பட்டாளங்களை சேர்த்துகிட்டு இசுலாமியர்களுக்கும் பொதுவுடமைவாதிகளுக்கும் தலித்துகளுக்கும் பெரியாரிஸ்ட்டுகளுக்கும் எதிரானவனா அந்த பசங்களை திருப்பிவிடுவானுக. இவனுகளுக்கு ஒழுக்க விதிகள்னு எதுவும் கிடையாது. சாராயம் கஞ்சா போதை பொருள்கள் பெண் சகவாசம் என அனைத்தையும் கொடுத்து அவனை சிந்திக்கவே விடமாட்டானுக.

இதுல என்ன பெரிய கொடுமைன்னா, மார்க்ஸ் அம்பேத்கர் தந்தைபெரியார் போன்ற தலைவர்கள் எல்லாம் எந்த மக்களுக்காக, எந்த மக்களின் உரிமைக்காக போராடுனாங்களோ அவங்களுக்கு எதிராக அந்த சேரி வளவு மக்களையே, பிற்படுத்தப்பட்ட மக்களையே மூளைச்சலவை செய்து உருவாக்குறானுக பாருங்க அதுவே அவனுகளுக்கான வெற்றி. இன்னமும் ஜெயிலுக்குள்ள இரட்டைக் குவளை முறை மட்டும்தான் வரல மீதி எல்லாமே இங்க நடக்குது இதையெல்லாம் நானும் பல வருசமா பாத்துகிட்டேதான் இருக்கேன். ஆத்திரப்படறதால இங்க எதுவும் மாறிடப்போறதில்ல.

தேவையில்லாம இவனுகளோட சண்டைபோட்டுகிட்டு, வன்மத்தை வளர்த்துகிட்டு, மன உளைச்சலுக்கு ஆளாக வேண்டாம். பொறுமை ரொம்ப அவசியம். நீங்க கத்துக்க வேண்டியது நிறைய இருக்குது. தெரிஞ்சோ தெரியாமலோ ஆதிக்கத்தை எதிர்த்து அழித்தொழிப்பு வேலையை கையில் எடுத்துட்டீங்க. இனி இந்த சட்டமும் சமூகமும் இந்த சிறைச்சாலையும் உங்களை விடவே விடாது.



கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கு. முதல்ல நீங்க வெளிய போற வழியை பாருங்க. பிறகு என்ன செய்யணும்னு நான் சொல்றேன்.

போ ஒன்னோட வந்த மத்த பசங்களையும் நீதான் பாதுகாக்கணும்.

ஓய்வா இருந்தா காலைல என்னோட செல்லுக்கு வா" என்றபடி காமராசுவை அழைத்துக்கொண்டு அவரது செல்லை நோக்கி நடந்தார் லெனின்.

"ஏன் தோழர் இவன் அடிக்கடி இதே போல பிரச்சனை பண்றான். இவனை ஒரு முறை கவனிச்சி விடலாமா தோழர்?" என்றார் காமராசு

"வேண்டாம் தோழர் இவனை அடிக்கறதோ உதைக்கறதோ பெரிசில்ல அது உடனே தீர்வை கொடுத்திடுமா? அல்லது அவன் திருந்திடப்போறானா. விடுங்க தோழர் ஒருத்தனை அடிக்கறதால் அவன் திருந்திடபோறதில்ல. அது மேலும் அவனுக்கு அந்த சமூகத்துமேல வெறுப்புணர்ச்சி தான் ஏற்படுத்தும். விடுங்க அவன் ஒரு ஆளுன்னு அவனை பத்திபேசி நேரத்தை வீண்டிக்கத்தேவையில்லை.

அடுத்தவாரம் தமிழரசன் தோழர் நம்மள பாக்க வர்றதா தகவல் குடுத்திருக்காரு. அந்த கெமிக்கல் கம்பெனியை மூடறதுக்கு அவரும் ரொம்ப காலமா முயற்சி பண்ணிக்கிட்டே இருக்காரு.

உள்ளூர் போலீஸ் அரசியல் வாதிகள் அதிகாரிகள் தலையீடு காரணமா அவரால அங்க ஒன்னும் பண்ண முடியல. ஊர்மக்களை ஒருங்கிணைச்சு நடத்துன ஆர்ப்பாட்டம், போராட்டம் எல்லாமே வீணாத்தான் போய்கிட்டு இருக்கு. உள்ளூர் பசங்க மேல நிறைய பொய்வழக்குகளைப் போட்டு இருக்குது போலீசு.

ரெண்டு தடவை தோழர் தமிழரசனையும் கொலை பண்ண முயற்சி நடந்திருக்கு. தோழர் ரொம்பவே மனதளவில் பாதிப்புக்கு உள்ளாயிட்டார். அதான் பழையமாதிரி அழித்தொழிப்பு வேலையை ஆரம்பிச்சுடலாம்னு தோணுது

கெமிக்கல் கம்பெனியை தகர்த்துவிடுவது அந்த முதலாளியை தீர்த்துக்கட்டுவது. ரெண்டு திட்டமும் சரியாவே போட்டு வைச்சாச்சு அடுத்தகட்ட நகர்வுக்காக நம்மளைப் பார்க்க வர்றாரு."

**- தொடரும்**



▪ மே 19 (1913) – சஞ்சீவரெட்டி (முன்னாள் குடியரசுத் தலைவர்) பிறந்த தினம்

# வடலூர் துரை. சந்திரசேகரன்

## பொதுச் செயலாளர் - திராவிடர் கழகம் நேர்காணல்

பெரியாரை தமிழகத்தைத் தாண்டி இமயம் வரை, ஏன்? உலகத்தின் பல்வேறு நாடுகளில் கொண்டு போய் சேர்த்த பெருமை தமிழர் தலைவர் ஆசிரியருக்கே உண்டு. ‘மண்டைச் சுரப்பை உலகு தொழும்” என்றார் புரட்சிக் கவிஞர். அதை செயலாக்கியிருப்பவர் ஆசிரியரே. அதனால் தான் தந்தை பெரியார் தமிழர் தலைவர் என்ற நிலையைத் தாண்டி உலகத் தலைவராகப் போற்றப்படுகிறார்.

தந்தை பெரியாரைக் கடுமையாக விமர்சனம் செய்தவர்கள் இன்றைக்கு பெரியார் விழா கொண்டாடக் கூடிய நிலை ஏற்பட்டது தமிழர் தலைவரின் அருஞ்செயலால் தான். எல்லோரும் பெரியாரை இன்று கொண்டாடும் நிலை உருவானதற்கு பெரியார் மறைவுக்குப் பின் அய்யாவை நிலைப்படுத்த ஆசிரியர் பட்டபாடுகள் ஏராளம் எனலாம். தந்தை பெரியாரின் எழுத்துக்களை பேச்சுக்களை நூலாக்கித் தலைப்பு வாரியாக எளிமைப்படுத்தி ஆயிரமாயிரமாய் படைக் கருவிகளாக நாட்டின் வாசிப்போர் வசம் கொண்டுபோய் சேர்த்தவரும் அவரே. பெரியார் நகர்வு புத்தகச் சந்தை, புத்தகக் கண்காட்சியில் பெரியார் புத்தக அரங்கு, வாசகர் வட்டம், படிப்பகங்கள், நூலகங்கள் என அய்யாவின் அரிய கருத்துக் கருவூலம் கணக்கிட்டு சொல்ல முடியாத அளவுக்கு பரப்பப்பட்டுள்ளது - காரணம் ஆசிரியரின் திட்டமிட்ட ஏற்பாடே.

பெரியார் பன்னாட்டு மய்யம் மூலம் பல நாடுகளில் பெரியார் கொள்கை பரப்பு மய்யங்கள், சுயமரியாதை மாநாடுகள் செர்மன் போன்ற நாடுகளில், பல்கலைக்கழகங்களில் பெரியார் இருக்கை, பகுத்தறிவுப் பரப்பும் சுற்றுப் பயணங்கள் என பலவேறு வகைகளில் பெரியாரியலை உலகம் முழுவதும் கொண்டு போய் சேர்ப்பதில் அசாத்தியமான பணி ஆசிரியருடையதே.

*IHEU* என்று சொல்லக்கூடிய உலக மனிதநேயர்கள், நாத்திகர்கள் அமைப்பில் திராவிடர் கழகத்துக்கு முக்கிய பங்கு கிடைக்கச் செய்தமை... உலக நாத்திக, மனித நேய அறிஞர்களை அழைத்து தம்ழகத்தில் பெரியாரின் அரிய தொண்டை, சிறப்பை உற்று நோக்கச் செய்த செயல் சாதாரணமானதல்ல.

தமிழகத்திலே கூட கொள்கையையும் தாண்டி மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்காக, ஜாதி இழிவை ஒழிப்பதற்காக, வழிபாட்டுரிமையை நிலைப்படுத்துவதற்காக அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற அய்யாவின் எண்ணத்தை ஈடேற்றிட ஆசிரியர் உழைத்திட்ட உழைப்பு வியப்புக்குரியதே. ஆம். தொடர்ந்த போராட்டம், அரசுக்குக் கொடுத்த அழுத்தம், நாடு தழுவிய பரப்புரை இப்படியாய் கழகம் எடுத்திட்ட முயற்சிகள்.

இந்துத்துவ வெறியர்களும், மத்திய மதவாத அரசும் தொடர்ந்து தமிழகத்தின் வளர்ச்சியை தடுத்திடும் நோக்கில் கொண்டு வரும் நாசகார திட்டங்களுக்கு எதிராக, சட்டங்களுக்கு எதிராக, மக்களை அணிதிரட்டும் பங்குபணி ஒருபக்கம், தமிழகத்தின் உரிமைகள் பரிபோகா வண்ணம் தடுத்திடும் முயற்சி இன்னொரு பக்கம், ஆண்டாள் பிரச்சனை தொடங்கி காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திட வலியுறுத்தும் பிரச்சனை வரை சளைக்காது போராடும் போர்க்குணம்



# திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி பற்றி...

என ஆசிரியர் அய்யாவின் அரிய பணிகள் மகத்தானவை.

தத்துவரீதியாக அறிவார்ந்த சிறப்பு சொற்பொழிவுகள் இடைஇடையே - பல்லாயிரம் பேர்கள் பயன்பெறும் வண்ணம் - உரிமை உணர்வு பெறும் வண்ணம்.

'நம்மால் முடியாதது வேறு எவராலும் முடியாது: வேறு எவராலும் முடியாதது நம்மால் மட்டுமே முடியும்" என்ற தன்னம்பிக்கை முழக்கம் தொண்டர்களுக்கு மட்டுமல்ல.... தலைவரும் தனது முயற்சியில் முன்நிற்கிறார். வேறு எவரிடமும் காணமுடியா அருங்குணம்- நாட்டுக்குழைத்திட்ட, இயக்கத்திற்கு பாடுபட்டுள்ள மூத்த தோழர்களை நலம் விசாரிப்பும், உரிய மருத்துவ உதவிகளும் - இவரால் மட்டுமே சாத்தியம்.



தன்னலம் கருதா தகைமையாளராக செல்லுமிடமெல்லாம் தோழர்களின் நலத்தில் அக்கறை, மரித்துப் போன தோழர்களின் இல்லத்தார்க்கு ஆறுதல், அறக்கட்டளை சிறுவனங்களின் வளர்ச்சிக்கான நடைமுறைகள், நாள்தோறும் பெரியார் கொள்கை பரப்பும் தொண்டறம்.... அடடா... தமிழர் தலைவரின் தொடர் பணிகள் பெரும் ஓட்டமாய்....

தந்தை பெரியாரை சுவாசிப்போம்... தமிழினத்தின் - ஒடுக்கப்பட்ட மக்களின் மூச்சுக்காற்றை மேலும் மேலும் சுவாசிப்போம்... அப்பொழுதுதான் மனித குலத்தை நேசிக்க முடியும். தமிழர் தலைவருக்கு பின்னால் அணிவகுப்பது தமிழ்நாடு முன்னேற - முன்செல்ல உதவும்.

திராவிடர் கழகத்தை இளைஞர்களின் பாசறையாக, மகளிரின் பாடிவீடாக ஆக்கிடவும், உலகின் ஒரே பகுத்தறிவு நாளேடான விடுதலையை லட்சக்கணக்கில் பரவிடும் வகை செய்யவும் அயராதுழைக்கிறார் அவர். பெரியார் உலகு பிறக்கட்டும்: பெருமைகள் எங்கும் நிலைக்கட்டும்.

**சாதாரண மாணவர் தோழராக இருந்து கழகத்தின் பொதுச் செயலாளராக உயர்ந்துள்ள உங்களைப் பற்றி...?**

பழைய தென்னார்க்காடு மாவட்டம் இன்றைய கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி நான் பிறந்த ஊர் பள்ளிக்கல்வி குறிஞ்சிப்பாடிலேயே கல்லூரிக் கல்வி கடலூர் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சட்டப்படிப்பு சென்னை டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகம், முனைவர் பட்டம் தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம்

எளிய வேளாண்குடியில் பிறந்தேன். எனது தந்தையார் பிரபல மந்திரவாதி ஆவார். எங்கள் பகுதியில் குத்துச் சண்டை பயில்வானும் கூட பக்தியில் திளைத்த குடும்பம். எங்கள் குடும்பத்தினர் இளைப்பாறுகின்ற இடங்கள் பழனி, திருப்பதி, இப்படியாய் பிரசித்தி பெற்ற பக்தி பரப்பிடும் பதிகள் தாம்.

எனது அப்பா இல்லாத போது நானே பேய் பிடித்துள்ளதாகக் கூறி வருவோருக்கு வேப்பிலை சாத்து செய்துள்ளேன் மந்திர உச்சாடனங்கள் உச்சரிப்பும் உண்டு ஏகாதசி விரதம் இரவு முழுவதும் கண் விழிப்பு, சனிக்கிழமை விரதம் ஒரு வேளை மட்டுமே உணவு..... இருந்திருக்கிறேன். பழமையின் மீது பற்றுதல் கொண்ட மனநோயாளியைப் போல என் தொடக்க காலம்.

ஒன்பதாம் வகுப்பு படித்த போது நெய்வேலி நகரத்தில் தந்தைப் பெரியாரை பார்த்ததும் அவரின் பகுத்தறிவு உரையைக் கேட்டதும் சிறு சலனத்தை என்னுள் ஏற்படுத்தியது. கொள்கைத் தொடர்புக்கு ஆளில்லாமல் தூண்டல் இல்லாததால் துவங்கல் இல்லாமல் போனதைப் போல் ஆனது. *1970 - 71* புகுமுக வகுப்பு படித்த போது கடலூர் கல்லூரி எனக்கு பகுத்தறிவு பாய் விரித்தது என்றே சொல்ல வேண்டும். மாவட்ட மைய நூலகத்தில் செய்தித்தாள்களை வாசிக்கச் சென்ற என் கண்ணில் "விடுதலை" பட்டது. தொட்டேன்... வாசிக்கத் தொடங்கினேன். இன்றுவரை விடுதலை என்னை விடவில்லை. அலாதியான காதலன் விடுதலைக்கு நான் ஆகிப்போனேன். பற்றிக்கொண்டது பகுத்தறிவுக்கொள்கை - தொற்றிக்கொண்டேன் பெரியார் இயக்கமெனும் திராவிடர் கழகத்தை. ஆம்... மடமையில் ஊறிப்போன மந்திரவாதியின் மகன் மானத் தலைவராம் பெரியாரின் தொண்டரானேன். படித்த கல்லூரியில் மாணவர் பகுத்தறிவுக் கழகம் கண்டேன். தமிழ் வகுப்பில் எனது பெருமைக்குரிய பேராசிரியர் த.பழமலய் கடவுளர் கதைகளை கிண்டிக் கிளறுவார். அவரின் பகுத்தறிவு நகைச்சுவை பல மாணவர்களை இயக்கத்தின் பால் ஈர்த்தது.

கடலூர் மஞ்சை நகர் திடலில் கழகப் பொதுச் செயலாளர் ஆசிரியர் அய்யாவை அழைத்து பொதுக்கூட்டம் நடத்தினோம். அக்கூட்டத்தில் தான் என் கன்னிப் பேச்சு. அவரால் மேலும் வேகம் பெற்றேன்- வெகுவாக கழகத்தின்பால் கவரவும்பட்டேன். கடலூரில் தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாட்டுக்காய் சுற்றுப்பயணம் வந்த தந்தை பெரியாரை தொட்டு பார்க்கும் வாய்ப்பு - அவருடன் வண்டியில் புதுவை செல்லும் வாய்ப்பு - அவரின் பேச்சை மீண்டும் மீண்டும் கேட்கும் வாய்ப்பு சீரிய களப்போராளியாக கழகத்தில் நான் உருப்பெற உதவியது. மாவட்டத்துக்குள் தமிழர் தலைவர் வரும் போதெல்லாம் அவருடன் பொதுக்கூட்டங்களில் பஞ்குபெறும் அருமையான சூழல் மறக்க முடியாதவை. எனக்கு பேசுகிற வாய்ப்பை வழங்கி அழகு பார்ப்பார் தலைவர். இப்படித்தான் நான் இயக்கவாதியானேன், முழுநேரத் தொண்டனைப் போல் உழைக்கலானேன்.

திருச்சியில் ஐயா மறைவுக்குப் பின் அன்னை மணியம்மையார் நடத்திய பகுத்தறிவுப் பயிற்சிப் பட்டறை சீரிய கொள்கையாளனாகவும், சொற்பொழிவாளனாகவும் மலர வழிவகுத்தது.

மாவட்ட திராவிட மாணவர் கழக துணை அமைப்பாளர், மண்டல திராவிடர் மாணவர் கழகச் செயலாளர், கழக மாணவரணிச் செயலாளர், மாநில கழக மாணவரணி செயலாளர், மாநிலக் கழக இளைஞரணி செயலாளர், மாநில மாணவர் இளைஞரணிச் செயலாளர், திராவிடர்

மாவட்ட கழகச் செயலாளர், மாவட்ட தலைவர், கழக பிரச்சார அணிச் செயலாளர், கழக துணைப் பொதுச் செயலாளர், கழக பொதுச் செயலாளர் எனப் பல்வேறு பொறுப்புகளை ஏற்று ஏற்றுக் கொண்ட பொறுப்புக்குரிய சிறப்பான செயல்பாடுகளையும் செய்து வருகிறேன் பொறுப்பு என்பதை நாம் செய்யும் இயக்கப் பணிக்கு கிடைத்த அங்கீகாரமாக மட்டுமே கருதுபவன். பொறுப்பு இல்லாமலும் எப்போதும் போல் வழமையாக களப்பணி செய்திட்ட அனுபவமும் உண்டு.

இயக்கம் அறிவித்த போராட்டங்கள் பெரும்பாலானவற்றிலும் பங்கு பெற்றுள்ளேன். கடலூர், சென்னை, வேலூர் மத்திய சிறைகளில் பலமுறை போராட்டவீரனாக விசாரணைக் கைதியாக இருந்திட்ட நல்வாய்ப்பும் உண்டு.

“புத்தம் சரணம் கச்சாமி,

தம்மம் சரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாமி” என்பதைப் போல் கொள்கை, இயக்கம், தலைமை மூன்றுக்கும் எப்போதும் கட்டுப்பட்டவனாக பணியாற்றி வருகிறேன். 47, 48 ஆண்டு கால பொது வாழ்க்கை அனுபவம் பலநூறு இளைஞர்களை இயக்க லட்சியப் பாதையில் பயணிக்கச் செய்ய உதவி இருக்கிறது. 1600 க்கும் மேற்பட்ட சுயமரியாதைத் திருமணங்களை நடத்தி வைத்திருக்கிறேன் என்பதும் சாதனை தான். இன்று வரை சமரசமற்ற களப்பணியாளனாக கழகத்தில் களமாடி வருவதைப் பெருமையாகவும் கருதுபவன் நான். பெரியார் கொள்கையை வாழ்க்கை நெறியாக்கிக் கொண்டு வாழுவதால் 100 க்கு 100 வெற்றிபெற முடியும் என்பதை உணர்ந்திருக்கிறேன். மெய்ப்பித்திருக்கிறேன். மொழி உணர்வும், இன உணர்வும், பிறந்த சமுதாயத்துக்கு தொண்டாற்றிடும் சேவை மனப்பான்மையும் மிக்க இளம் தோழர்களை நூற்றுக்கணக்கில் உருவாக்கியதில், அவர்கட்கு நல்ல தோழனாய்-வழிகாட்டியாய் இருந்து வருவதில் மன திருப்தி அடைகிறேன். பெரியார் கொள்கையை உலகமயப்படுத்திவரும் தமிழர் தலைவரின் தலைமையில் பெரியாரியலை வெல்லச் செய்யும் பெரும்பாணியில் பங்காற்றுவதைப் பெருமையாகக்



கருதுகிறேன்.

**தாங்கள் வாழ்நாள் சாதனையாகக் கருதுபவைப் பற்றி...**


‘காலம் தந்த தலைவர்’ - தமிழர் தலைவரை பற்றிய தொகுப்பு நூலினையும் ‘அறிவின் திறவுக்கோல்” எனும் நூலினையும் ஆக்கியுள்ளேன். தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ‘மனித உரிமைக்கு திராவிடர் கழக பங்களிப்பு” எனும் ஆய்வினை மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றதும் மனதிற்குள் பெருமிதத்தை தந்தது. காரணம் அய்யா பெரியாரைத் தொடர்ந்து அன்னை மணியம்மையார், ஆசிரியர் காலத்தில் கழகம் நடத்திய போராட்டங்கள், பெற்றுக்கொடுத்த உரிமைகள், செய்திட்ட பரப்புரைகள், ஆற்றிவரும் அருந்தொண்டுகள் அனைத்தும் மனித உரிமைகள் பற்றியவைதாம் என்பதை எனது ஆய்வில் நிறுவியுள்ளேன். இயக்கத்திற்கு நான் ஆற்றிய நன்றிக்கடனாகவே பார்க்கிறேன். சிறந்த தலைமையும், சீரிய தத்துவமும் பின்னிப் பிணைந்த திராவிடர் கழகம் எவ்வித எதிர்பார்ப்புமின்றி மக்கள் தொண்டாற்றி வருகிறது என்பதும் - அப்படிப்பட்ட அமைப்பில் தொண்டனாக என்னால் ஆன பணிகளைச் செய்துவருகிறேன் என்பதுமே எனது வாழ்நாள் சாதனையாகக் கருதுகிறேன். கூடுதலாக நான் ஆய்வு மேற்கொண்ட ‘மனித உரிமைக்கு திராவிடர் கழக பங்களிப்பு” என்ற ஆய்வை “மனித உரிமைகளின் மறுபெயர் பெரியார்” என்ற தலைப்பில் எழுதிமுடித்துள்ளேன் அதனை மதி பப்ளிகேசன் வெளியீடு செய்ய உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ●



அசோக் பிரபு

# கீரைக்காரி...

*(ஒரு வயோதிக மூதாட்டி வேகாத வெயிலில் சந்தையில் கீரை விற்கின்றாள். அந்தி வரை விற்ற போதும் போணியாக சோகத்தில் அவள் கண்ணீர்மல்கப் புலம்பி விசும்புவதை அவள் சாயலில் இங்கு கவிதையாக....)*



மணியூருச் சந்தையில
மண்ணுருகும் வெயிலில
அணியணியாக் கட்டுக்கட்டி
அகத்திக்கீர விற்கவந்தா

அங்கம்மா இவபேரு
அகவையோ அறுவத்தாறு
செங்கீர விற்காட்டி
தீராது இவபாடு

சும்மாடு கூட்டிவச்சு
கீரைச்சுமையத்தான் தூக்கிவந்து
"அம்மாடி"ன்னு இடுப்புப்புடிக்க
அலுங்காம எறக்கிவச்சா

சந்தைக்கட வரிசையில
தக்கதொரு எடம்புடிச்சு
கந்தல் துணிவிரிச்சு
கணக்காகக் கடைபோட்டா

ஒருகட்டுச் செங்கீரையே
ஒழுங்கா விற்குமுன்ன
வரிகேட்டு வந்துநின்னான்
வாட்டமான தண்டல்காரன்

மூட்டைக்கு அம்பதுன்னு
மொறைப்படி அவங்கேட்க
கேட்ட காசெடுத்து
கைநடுங்க கொடுத்துவச்சா

கீரைக்கட்டு எல்லாத்துக்கும்
கேட்டவெல கெடச்சுப்புட்டா
காரச்சேவு வாங்கலாமின்னு
கண்முழிச்சே கனாக்கண்டா

புடிகீர அத்தனையும்
பொழுதுக்குள் வித்துப்புட்டா
மடிப்பிச்சை எடுக்கிறதா
மாரியம்மன வேண்டிக்கிட்டா

கொண்டுவந்த கீரைத்தான்
கசங்காம கலையாம
செண்டுபோல பிரிச்செடுத்து
சூசகமாக் கூறுவச்சா

முத்தாத மொளக்கீர
முதிராத சிறுகீர
சத்தான செங்கீர
சாமிகளா! வாங்கன்னு

ஆவி துடிக்கமட்டும்
அடித்தொண்ட கிழியமட்டும்
கூவி வித்தபோதும்
கீரைவாங்க ஆருமில்ல

சீமாட்டி அவகடையில
செத்தமீனுக்கே மதிப்பிருக்க;
மூதாட்டி எங்கடையில
முருங்ககீரைக்கு
வெலையில்லையே ..?
சிந்தாத வெப்பத்தைச்
சூரியனும் சிந்திவர
முந்தானை சீலயெடுத்து
முக்காடு போட்டுக்கிட்டு

தண்டுஞ் சுருங்காதிருக்க
தழையெல்லாம் வாடாதிருக்க
கண்ணீரத் தண்ணீர்போல
கீரைமேல தெளிச்சுவச்சா

கற்கண்டு வியாவாரிக்கும்
கருப்பட்டி வியாவாரிக்கும்
விற்காட்டி அவுகளுக்குப்
பெருநட்டம் ஏதுமில்ல

இந்தச் சந்தையில
எஞ்சின சரக்கெல்லாம்
அடுத்த சந்தைவரைக்கும்
அவிஞ்சு விடப்போறதில்ல

ஆனா ......
எம்பொழப்பு அப்படியா?

சாரப்பாம்பு வாயில்புகுந்த
தவளைகதி எப்படியோ
கீரவிக்கும் கெழுட்டுச்சிறுக்கி
எம்பொழப்பும் அப்படியே

அந்திக்குள் விற்கலேனா
அகத்திக்கீர அழுகிப்போகும்
பொழுதுக்குள் விற்காட்டி
பொன்னாங்கண்ணி
பொசுங்கிப்போகும்

பஞ்சப்பாட்டையே ; கிழவி
பாடிப்பாடி அழுகையில
மஞ்சப்புடவ கட்டினவ
மயில்போல கிட்டவந்தா

கன்னியிவ அங்காளி
கர்ணனுக்குப் பங்காளி
கஞ்சப்பையன் வயித்தில்
கருத்தரித்த சீமாட்டி

பட்டுப் பூச்சிபோல
பையவந்த சிறுக்கிமக
தொட்டுதூக்கி கீரவெல என்ன?
கெழவின்னு அவகேட்டா

பத்துக்கு ரெண்டுகட்டுன்னு
பதறாம வெலச்சொல்ல
எட்டுக்கு ரெண்டுகட்டுன்னா
எடுத்துகிறேன்னு இவசொன்னா

அசலுக்கே ஆகாதபடி
அடிவயித்தில் அடிக்கிறயே
முசக்குட்டிய நாய்வாலில்
முடுஞ்சுவைக்கப் பாக்குறியே

புலம்பிய கெழவிபாட்டப்
புரியாத சிறுக்கிமக
வெலகிப் போகையில
வா! தாயி வா !ன்னு

கொடுக்கிற காசையே
கும்பிட்டு வாங்கிக்கிற
"எடுத்துக்க தாயி! எடுத்து"கன்னு
ஏங்கியபடி கெழவி சொன்னா

கருகுக்கும் வெயிலில
கடைசிவரைக்கும் வித்ததுல
சுருக்குப் பைவிரிச்சு
சொரண்டிப் பாத்ததுல

அம்பதுரூவாய்கே இன்னும்
அஞ்சுபணம் சேராதிருக்க
சம்பாதித்த காசயெல்லாம்
சுங்கவரிக்கே சரியாப்பேச்சே

கேழ்வெறகு வாங்கவும்
காசுபணம் கூடல்லையே
வால்மிளகு வாங்கதற்கு
வராகஞ் சேரலையே


வித்த கீரைகட்டெல்லாம்
வரிக்குமட்டுமே போனியாச்சு
விற்காத கீரையெல்லாம்
வெள்ளாட்டுக்குத் தீனியாச்சு

கருவாடாப் போனமீனு
கடல்நீந்த விதியிருக்கா
கருமாரித்தாயே நானினி
கஞ்சிகுடிக்க வழியிருக்கா..?



▪ மே 27 (1964) – ஜவஹர்லால் நேரு, (இந்தியாவின் முதல் பிரதமர்.) – நினைவு தினம்

கவிஞர். நா.காமராசன் மண்டகொளத்தூர்





# பள்ளிக்கூடம்

மூணாம் வகுப்பு
முதல் பாடவேளை!

பூங்கண்ண வாத்தியார்தான்
வருகைப்பதிவேட்டை
படித்தார்!

அனா ஆவன்னா வரிசையில்
உள்ளேன் அய்யா குரல்
ஒலித்தது!

ராமு வேலய்யன் குமாரு
ஏன்டா இன்னைக்கு பள்ளிக்கு
வரல
பூங்கண்ண வாத்தியாரின்
குரலில் அதட்டல் தெரிந்தது!

நீங்க மூணுபேரும் போயி
அவங்க எங்க இருந்தாலும்
புடிச்சிட்டு வாங்க!

நான் பழனி வேடியப்பன்தான்
அந்த மூணுபேரு
வீட்டுக்குலாம் போயி தேடிப்பார்த்தோம்
மூணுபேருமே இல்ல

முள்ளேலித்தோட்டம்
கலுகுட்டு கால்வாய்லாம்
தேடிப்பார்த்தோம்
ஈ காக்காக்கூட இல்ல!

அப்போதான் பழனி சொன்னான்
கணக்கமுட்டு புளியமரத்தாண்டாதான்
கோலி வெளையாடிட்டு இருப்பாங்கனு!

எங்கள தூரத்துல பார்த்ததுமே
மூணுபேரும் மரத்துமேல
ஏறி ஒளிஞ்சிட்டானுங்க!

பள்ளிக்கூட பையெல்லாம்கூட
மறைச்சி வச்சிட்டானுங்க!
வேடியப்பன் தூரத்துலயே
இதெல்லாம் பார்த்துட்டான்!

நாங்களும் ஒண்ணுந்தெரியாத
மாதிரியே மரத்துகிட்ட நின்னோம்
மூணுபேரும் உச்சிக்கிளையிலே
உட்கார்ந்திருக்காங்க!

பழனிதான் என்னமேல ஏறச் சொன்னான்
மெதுவா நானும் மேல ஏறுனேன்!

ராமு என்னப்பார்த்துட்டு
திட்றான்
நாங்க பள்ளிக்கூடம் வரமாட்டோம்
போடான்னாங்க

நா விடவேயில்லை
உங்கள புடிச்சிட்டுபோகலனா
வாத்தியார் எங்க தோல
உறிச்சிடுவாருன்னேன்!

ஆளுக்கொரு கிளைக்கு தாவுனாங்க
மூணுபேரும்
குமாருதான் மொதல்ல
கீழகுதிச்சான்
பழனியும் வேடியப்பனும்
அவன புடிச்சிட்டாங்க
ராமு சேத்துல குதிச்சி
ஓடிட்டான்
வேலய்யன் நெல்தண்ணி
கொளத்துக்கா ஓடிட்டான்
பையெல்லாம் மரத்துமேலேயே
தொங்குது

ரெண்டாவது பாடவேளை முடிஞ்சி
மூணாவது தொடங்கியிருக்கும்
குமாரு பையன மட்டும்
மூணுபேரும் புடிச்சிட்டு போனோம்!


இப்போ குமாரு அதே பள்ளிக்கூடத்துல
வாத்தியாரு

நேத்துகூட என்ன கூப்புட்டு
சொன்னான்
உன் பையன ஒழுங்கா
பள்ளிக்கூடம் வரச்சொல்லு
பசங்கக்கூட சேர்ந்துட்டு
கணக்கன் தோட்டத்துல
கிரிக்கெட் விளையாடிட்டு
இருக்கானு!

இதோ நானும் தேடிக்கொண்டிருக்கிறேன்
வாழ்க்கையையும்
பள்ளிக்கு போகாத என்
மகனையும்! ●

# மதி பப்ளிகேசன்

தருமபுரி – 635 205 தொடர்புக்கு : 73733 33078 மின்னஞ்சல்: madhipublication@gmail.com
























































மனித நேயத்தின் மறுபரிணாமம்

# வெண்புறா

Venpura

இது கல்விக்கான மாபெரும் புரட்சி வழி

**இலவச மது மற்றும் புகையிலை ஒழிப்பு முகாம் மும்பை மற்றும் சிறுகுறு தொழில் செய்வதற்கான இலவச பயிற்சி முகாம்**

எமது தயாரிப்புகள்



மது பழக்கத்தில் இருந்து விடுபட




ச.செல்வகுமார்

நிறுவனர் மற்றும் தலைவர்



பான், பீடி, புகையிலை பழக்கத்தில் இருந்து விடுபட

இயற்கை மற்றும் ஆர்கானிக் தேயிலை



புத்துணர்ச்சி பெறும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்

சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பொருந்தும்



மேலும் விபரங்களுக்கு

## Venpura Foundation
## Venpura Corporation P.Ltd.,

**Jora Life Care IIP, SPJ Enterprises**

**250/B, 2nd Floor, Phonex Paragon Plaza, Kamani, Kurla (West), Mumbai- 400 070. www.venpura.in info@venpura.in**

**022-29744514/ 022-49744515, 99307 20123**



FROM
S.Veeravel
Plot no.45 S1 Aves Castle,
Auditors colony,
Mannivakkam,
Chennai-600048
EDITOR & PUBLISHER:
ARIVAZHAGAN CM
Contact : 7373333078
kaithadimonthly@gmail.com



Owned, published by C. Arivazhagan printed at JAYASRI PRINTPACK, No: 223, P.K.N. Road, Murugan Colony (bye pass), Sivakasi - 626 189. Published from Madhi Publication, Dharmapuri - 635 205. Editor. C. Arivazhagan, email: kaithadimonthly@gmail.com.